# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 70 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை
(27.09.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 11, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## கனடாவில் அடைக்கலம் பெறும் பயங்கரவாதிகள்

அலி சப்ரி காட்டம்

02 பக்கம்



## திலீபனின் உருவத்தை பச்சை குத்திய இளைஞன்

02பக்கம்

## யாழில் கொட்டும் மழைக்கும் மத்தியில் தியாக தீபத்தின் நினைவேந்தல்!





புகஜிந்தன்

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை கொட்டும் மழைக்கும் மத்தியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, மூன்று மாவீரர்களின் தாயும் நாட்டு பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார்.

02பக்கம்

## நவம்பர் 13 இல் பட்ஜெட்




2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனை எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப் பிக்கப்படவுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வரவு - செலவுத் திட்ட யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இதனையடுத்து, மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல் இடைநிறுத்தம்



வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை இன்று (27) முதல் ஒக்டோபர் 2ஆம் திகதிவரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கான கணினி கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள மேம்படுத்தல் செயற்பாடுகளின் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02 பக்கம்



## இலங்கை அந்தர் பல்டி!

### சீனக் கப்பல் இலங்கை வர இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்கிறார் அலி சப்ரி

நமது வெளிநாட்டு செய்திச் சேவை

சீனக் கப்பல் இலங்கை வருவதற்கான அனுமதியை இலங்கை வழங்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இந்தியாவின் ஊடகமான ஏ.என்.ஐக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை தெரிவித்துள்ளார். சீனாவின் கப்பல் இலங்கையில் தரித்து நிற்பதற்கு இலங்கை அனுமதி வழங்கவில்லை....

02 பக்கம்







## டியாகோகார்சியா அகதிகளை நாடு கடத்தும் தீர்மானம் வாபஸ்

இந்து சமுத்திரத்தில் உள்ள பிரித்தானியாவின் பகுதியான டியாகோகார்சியாவில் கடந்த இரண்டு வருடகாலமாக சிக்குண்டுள்ள இலங்கை தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள், தங்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற்றுள்ளனர்.

இலங்கையிலிருந்து ஒடுக்குமுறையிலிருந்து தப்புவதற்காக சிறிய மீன்பிடிப் படகில் புறப்பட்டவர்கள் படகு பழுதடைந்ததால் நடுக்கடலில்...

02 பக்கம்

## உணவுக்குப் பதிலாக இரும்பு ஆணிகளை விழுங்க நிர்ப்பந்திக்கப்பட்ட பணிப்பெண்



### சவூதியில் நடந்த துயரம்

சவூதி அரேபியாவுக்கு வீட்டு வேலைக்காகச் சென்ற மாத்தளையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் ஒருவர் உணவுக்கு பதிலாக ஐந்து இரும்பு கொங்கிரீட் ஆணிகள் மற்றும் துணி உலர்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் இரும்பு ஸ்பிரிங் ஒன்றை விழுங்கி, வயிற்றில் ஆணியுடன் இலங்கைக்கு வந்துள்ளார்.

மாத்தளை, எல்கடுவ தேயிலைத் தோட்டத்தில் வசித்து வந்த எம்.எஸ். தியாகச் செல்வி என்ற 21 வயதான ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே இவ்வாறு ஆணிகளை விழுங்கியுள்ளார்.

சவூதி அரேபியாவின் தைட் பிரதேசத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணிபுரிந்து வந்த இவர், சவூதி வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவரின் நேரடித் தலையீட்டினால் சில தினங்களுக்கு முன்னர் தூதரகத்தின்...

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



ஸ்ரீலங்கா
பாலுக்கும் காவல்
பூனைக்கும் தோழன்..!

## மகாவலி காணிகளில் இரத்தினக்கல் அகழ்வு

### இடமளிப்பது தொடர்பில் கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பரிசீலனை



எம்பிலிப்பிட்டிய பகுதியில் மகாவலி காணிகளில் அறுவடைக்குப் பின்னரான காலப் பகுதியில் இரத்தினக்கல் அகழ்வுப் பணிகளுக்கு இடமளிப்பது குறித்து தேசிய மாணிக்கம் மற்றும் நகை ஆணையகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானம் எடுப்பது தொடர்பில் கைத்தொழில் அமைச்சுசார்...

02 பக்கம்

## மலேசிய படுகொலை இருவர் பொலிஸில் சரண்

மலேசியாவின் செந்துல் பகுதியில் மூன்று இலங்கையர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரும் மலேசிய பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் இலங்கையர்கள் எனத் தகவல் கிடைத்துள்ளதாக மலேசியாவிலுள்ள...

02 பக்கம்



## உஷ்



முன்னாள் அமைச்சர் ரிஷாட் ரணிலுடன் செட் ஆகிவிட்டாரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு தகவல் போயுள்ளதாம்.

ரணில் தலைமையில் அமையவுள்ள கூட்டணியில் ரிஷாட் இணைந்தால் மேலும் பல முஸ்லிம் எம்.பிக்கள் எதிர்க்கட்சியில் இருந்து போகும் அபாயம் உள்ளதாம்.




உங்கள் விருப்பம்போல Internet ஐ உபயோகிங்கள்

உங்களுக்கு உரிய மொபைல் Plan ஐ தெரிவுசெய்யுங்கள்

ரூ. 77/- முதல்
100GB வரை ஏராளமான Data Plans

ரீலோட் அல்லது MyDialog App ஊடாக செயற்படுத்துங்கள்

Dialog
எதிர்காலம் இன்றே.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/22/07






சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிராக நேற்று கோட்டையில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. **படப்பிடிப்பு:** *சமன் அபேசிறிவர்தன*

# கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் மணல் விநியோகத்திற்கு அனுமதி!

## எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலாகுமென அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் (02) மணல் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மணல் விநியோக விடயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அவசியத்தைக் கருத்திற்கொண்டு நேற்று (26) நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் 02 ஆம் திகதி முதல் காலை 06.00 மணி முதல் மாலை 06.00 மணிவரை அனுமதி வழங்கப்பட்ட வகையில் மணல் விநியோகத்தை முன்னெடுக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்த பின்னரே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற சட்டவிரோத மணல் கடத்தல்களைக் கட்டுப்படுத்த கடந்த 16 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலில் அமைச்சரின் பணிப்புரைக்கமைவாக இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த மணல் விநியோகம் துறைசார் தரப்பினரின் ஒருங்கிணைந்த துரித நடவடிக்கையால் கட்டுப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் - அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

மாவட்டத்தில் இடம்பெற்ற சட்டவிரோத மண் கடத்தல், போதைப்பொருள் பாவனை ஆகியவற்றைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் - அதன் முன்னேற்றங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று முடிவுகளும் எடுக்கப்பட்டன.

அத்துடன், நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் எட்டப்பட்டன.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சட்டவிரோத மணல் அகழ்வு, போதைப்பொருள் பயன்பாடு, சட்டவிரோத மதுபான உற்பத்தி உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் விவசாயம், நீர்வழங்கல், சுகாதாரம், உள்ளூராட்சி, கூட்டுறவு, வாழ்வாதாரம், மீன்பிடி, காணி, கால்நடை அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், விளையாட்டு உட்பட அனைத்து திணைக்களங்கள்சார் விடயங்களும் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில் வடமாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், வடமாகாண அமைச்சு சார்ந்த திணைக்களங்களின் பணிப்பாளர்கள், ஏனைய திணைக்களங்களின் பணிப்பாளர்கள், இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், மாவட்டத் திணைக்களங்கள்சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உறவினரின் மகள் பாலியல் துஷ்பிரயோகம்

## இராணுவ அதிகாரிக்கு 15 வருட சிறை

தனது உறவினரின் மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே 15 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

24 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த குற்றத்துக்காக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

2009 ஓகஸ்ட் 1 முதல் 31 ஆம் திகதிக்கு உட்பட்ட காலத்தில் 16 வயதுக்குட்பட்ட தனது உறவினரின் மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சட்ட மா அதிபரால் பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான நீண்ட விசாரணையின் முடிவில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டை நியாயமான - சந்தேகத்துக்கு இடமின்றி அரச தரப்பு நிரூபித்துள்ளதாகவும், அவர் தொடர்புடைய குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

### கனடாவில் அடைக்கலம்...

கனடா பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறியுள்ளது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ ஆதாரமற்ற பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர் என்பதால் அவரது கருத்துகள் எனக்கு ஆச்சரியமளிக்கவில்லை.

சில பயங்கரவாதிகள் கனடாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர். ஆதாரங்கள் அற்ற கடும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் சுபாவம் கனடா பிரதமருக்கு உள்ளது. இலங்கை விவகாரத்திலும் கனடா பிரதமர் அவ்வாறே நடந்துகொண்டார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக பெரும் பொய்யைச் சொன்னார். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பது அனைவருக்கும் தெரியும் எனக் குறிப்பிட்டுள்ளார். கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் ஒருவர் கொல்லப்பட்டமையின் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளது என்ற கனடா பிரதமரின் குற்றச்சாட்டினால் இந்தியாவிற்கும் கனடாவிற்குமிடையில் இராஜதந்திர முறுகல் நிலை உருவாகியுள்ள நிலையிலேயே இலங்கை வெளிவிவகார அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

### திலீபனின் உருவத்தை...

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இளைஞன் ஒருவர் தியாக தீபத்தின் உருவப் படத்தை தனது கையில் பச்சை குத்தியிருந்தமை பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் ஆலயத்திற்கு அருகில் நேற்று இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட இளைஞனின் கையிலையே பச்சை குத்தி இருந்தது. குறித்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

தமிழர் பகுதிகளில் பல்வேறு இடங்களில் இன்று தியாக தீபம் திலீபனின் இறுதி நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### வாகன அனுமதிப்பத்திரம்...

இதனால் பின்வரும் மாற்று ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 27.09.2023 முதல் 02.10.2023 வரை காலாவதியாகும் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களுக்கு அபராதம் விதிக்கப்படமாட்டாது. வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கப் பயன்படுத்தப்படும் ஆவணங்களின் செல்லுபடியாகும் காலம் 27.09.2023 முதல் 02.10.2023 வரை இருப்பின் உமிழ்வுச்சான்றிதழ் (Vehicle Emission test certificate) தகுதிச்சான்றிதழ் (Vehicle fitness certificate) ஆவணங்கள் 06.10.2023 வரை அலுவலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும். இந்நடவடிக்கை கிழக்கு மாகாணத்திலும் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மலேசிய படுகொலை...

இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. செந்துல் பகுதியில் உள்ள இலங்கைத் தம்பதிக்குச் சொந்தமான கட்டடத்தின் இரண்டாவது மாடியில் உயிரிழந்த மூன்று இலங்கையர்களின் சடலங்கள் அண்மையில் கோலாலம்பூர் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன. உயிரிழந்த மூவரில் ஒருவர் அந்த வீட்டைச் சேர்ந்த தம்பதியினரின் மகன் எனவும், மற்றைய இருவரும் வீட்டை வாடகைக்கு எடுத்து குடியிருந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் 20 முதல் 40 வயதுக்குட்பட்டவர்களாவர். இந்நிலையில், சந்தேக நபர்களை பொலிஸார் தேடிவந்த நிலையில் 2 பேர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### யாழில் கொட்டும் மழைக்கும்...

அதனைத் தொடர்ந்து தியாக தீபத்தின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும் நினைவிடத்திற்கு அருகிலுள்ள திலீபனின் ஆவணக் கண்காட்சிக் கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன், இரண்டு தூக்குக் காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததுடன், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்திற்கு 06க்கும் மேற்பட்ட ஊர்தி பவனிகள் வந்திருந்தன.

நினைவுச் சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பாக கடும் மழை பொழிய ஆரம்பித்த போதிலும், மழையையும் பொருட்படுத்தாது நினைவிடத்தில் கூடியிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்தார்.

அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12 நாட்களில் அவரது உயிர் பிரிந்தது.

### இலங்கை அந்தர் பல்டி!...

எனத் தெரிவித்துள்ள அலிசப்ரி, இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகள், இலங்கையின் பாதுகாப்புக் கரிசனைகள் என மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி சியான் ஆறு என்ற சீனக் கப்பல் இலங்கைத் துறைமுகத்திற்கு வரவுள்ளமை மற்றும் இந்தியாவின் கரிசனைகள் குறித்த கேள்விக்குப் பதிலளித்துள்ள அலிசப்ரி வெளிநாட்டுக் கப்பல்கள், விமானங்கள் இலங்கை வருவது குறித்து இலங்கையிடம் நிலையான இயக்கமுறை உள்ளதென்றும் இது குறித்து இந்தியா உட்பட நேசநாடுகளுடன் கலந்தாலோசித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சில காலமாக உரையாடலொன்று இடம்பெறுகின்றது. இந்தியா நீண்டகாலமாகத் தனது கரிசனைகளை வெளியிட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், அதேவேளை, நாங்கள் தற்போது வெளிநாட்டுக் கப்பல்கள், விமானங்கள் இலங்கை வருவது குறித்து இலங்கையிடம் நிலையான இயக்கமுறையொன்றை உருவாக்கியுள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதனை உருவாக்கும்போது இந்தியா உட்பட பல நேசநாடுகளுடன் அது குறித்து ஆராய்ந்தோம். வெளிநாட்டுக் கப்பல்கள், விமானங்கள் இலங்கையின் நிலையான இயக்கமுறையைப் பின்பற்றுகின்றவரை பிரச்சினையில்லை எனவும் அலிசப்ரி தெரிவித்துள்ளார். அதனைப் பின்பற்றாவிட்டால் பிரச்சினையே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபரில் சீனாவின் சியான் 6 கப்பல் இலங்கையில் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அது குறித்து இன்னமும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### டியாகோகார்சியா...

சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டு டியாகோ கார்சியாவிற்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

2021 ஒக்டோபர் 3 முதல் அவர்கள் அந்தத் தீவில் சிக்குண்டுள்ளனர்.

அவர்கள் புகலிடக்கோரிக்கையைக் கோரிய வேளை பி.ஐ.ஓ.டி. ஆணையாளர் அவர்களை சட்டபூர்வமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடியும் எனத் தெரிவித்தார்.

புகலிடக்கோரிக்கையாளர்கள் பத்துப்பேர் இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். பி.ஐ.ஓ.டி. ஆணையாளரின் தீர்மானம் எடுக்கும் நடைமுறை பிழையானது என வாதிட்டனர். அவர்களின் கோரிக்கைக்கேற்ப நீதித்துறை மறு ஆய்வு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

எனினும், பி.ஐ.ஓ.டி. ஆணையாளரைப் பிரதிநிதித்துவம் செய்த சட்டத்தரணிகள் தங்கள் ஆதாரங்களை மறுபரிசீலனை செய்வதற்கும் தங்கள் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்வதற்கும் இணங்கினர்.

ஆணையாளர் தற்போது குறிப்பிட்ட பத்துப் பேரினதும் பாதுகாப்புக் கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்ய இணங்கியுள்ளார். இந்த வழக்குடன் தொடர்பற்ற புதியவர்கள் இந்த மறுபரிசீலனையை முன்னெடுப்பார்கள்.

டியாகோ கார்சியாவில் உள்ள இலங்கையர்களை நாடுகடத்துவதற்கான உத்தரவை ஆணை யாளர் விலக்கிக்கொண்டுள்ளார். அவர்களின் பாதுகாப்புக் கோரிக்கைகள் புதிதாக ஆராயப்படும்.

எங்கள் நீதித்துறை மறுஆய்வுக்கு பதிலளிக்கும் வகையில் புகலிடக் கோரிக்கைகளைத் தீர்மானிப்பதற்கான டியாகோ கார்சியாவில் உள்ள அமைப்பை மாற்றியமைத்து அது தயாரித்த சட்டவிரோத முடிவுகளை திரும்பப் பெறுவதற்கான ஆணையரின் முடிவை நாங்கள் வரவேற்கிறோம். என புகலிடக்கோரிக்கையாளர்கள் எட்டுபேரின் சொலிசிட்டர்களான டொம்சோர்ட் ஓவ் லேய் டே தெரிவித்துள்ளார்

சர்வதேச பாதுகாப்பிற்கான கோரிக்கைகளை மிகவும் அவதானமாக கவனத்துடன் ஆராய வேண்டும் பிஐஓடி ஆணையாளரின் தீர்மானம் அந்த தராதரத்தை பின்பற்றவில்லை- சர்வதேச பாதுகாப்பிற்கான அவர்களின் கோரிக்கைகளை நியாயமாகவும் உரிய முறைப்படியும் ஆராய்வதற்காக டியாகோ கார்சியாவில் உள்ளவர்களை மூன்றாவது நாட்டிற்கு கொண்டுவரவேண்டும் என்பது எங்களின் நிலைப்பாடு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மகாவலி காணிகளில்...

ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் அறுவடை முடிந்த பின்னர் மகாவலி காணிகளில் அனுமதி வழங்கப்பட்ட விவசாய நிலங்களில் மாணிக்கக்கல் அகழ்வுக்கு கடந்த காலங்களில் அனுமதி வழங்கப்பட்டதாகவும் மகாவலி அதிகாரசபை இதற்குத் தற்பொழுது அனுமதி வழங்குவதில்லையென்றும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ குழுவில் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இரத்தினக்கல் அகழ்வின் மூலம் கிடைக்கும் இலாபத்தின் பங்கு அகழ்வுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சரியான முறையில் சென்றடைவதில்லையென்ற விடயம் குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. தொழிலாளர்களுக்கு உரிய பங்கு சென்றடைவதை உறுதிப்படுத்துமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கொவிட் சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் எதிர்கொண்டுள்ள கடன் பிரச்சினை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், அவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கு அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் ஸ்மைல் கடன்திட்டம் குறித்தும் அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

அத்துடன், 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான சாமர சம்பத் தசநாயக, விஜித பேருகொட, பியல் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான (பேராசிரியர்) சரித ஹேரத், ஜகத் குமார சுமித்திராரச்சி, உதயகாந்த குணதிலக, குலசிங்கம் திலீபன், சுமித் உடுகும்புர, குணதிலக ராஜபக்ஷ, குமாரசிறி ரத்னாயக ஆகியோரும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### உணவுக்குப் பதிலாக இரும்பு...

ஊடாக இலங்கைக்கு அழைத்துவரப்பட்டார்.

தனது மகளுக்கு நடந்த கொடுமை தொடர்பில் அவரது தாயார் தியாகு குமாரியும் வத்தேகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் கொழும்பிலுள்ள தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றினூடாக வீட்டு வேலைக்காக சென்றதாகவும் அங்கு உணவின்றி கடும் அழுத்தத்திற்கு உள்ளானபோது தனது தாயாரிடம் தொலைபேசியில் தெரிவித்ததைத் தொடர்ந்து அது குறித்து வெளிநாட்டு முகவர் நிறுவனத்திற்குத் தெரிவித்ததால் கோபமடைந்த வீட்டு உரிமையாளர்களான மகளும் தாயும் சேர்ந்து தன்னை கொடூரமாகத் தாக்கியதாகவும் 5 கொங்கிரீட் ஆணிகளை விழுங்கும்படி கட்டாயப்படுத்தியதாகவும் அவர் கூறினார்.

உணவுக்குப் பதிலாக இரும்பு ஆணிகளை விழுங்க மறுத்ததால் தான் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், தாங்க முடியாமல் ஆணிகளை விழுங்கியதாகவும் கூறியுள்ளார்.

பின்னர் துணிகளை உலர்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் வெள்ளை இரும்பினால் செய்யப்பட்ட ஸ்பிரிங்கை விழுங்கியதாகவும் அது தனது தொண்டையில் சிக்கியதாகவும் அவர் கண்ணீருடன் குறிப்பிட்டுள்ளார்.

பல நாட்களுக்குப் பிறகு வயிறு மற்றும் வாயில் இருந்து இரத்தம் வரத்தொடங்கியபோது வீட்டுரிமையாளர்கள் உள்ளூர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகச் செல்வி கூறினார்.

எனினும், அங்கிருந்த வைத்தியர்கள் பெண்ணின் வயிற்றில் ஐந்து இரும்பு ஆணிகளைப் பார்த்ததாகவும் அதற்கு சிகிச்சையளிக்க முன்வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பின்னர் அந்நாட்டுப் பொலிஸார் வந்து அவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இச்சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த உள்ளூர் வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் முன்வந்து பொலிஸாரின் ஊடாக தூதரக அலுவலகத்திற்கு அறிவித்து அவரை சவூதி வீட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்காமல் இலங்கைக்கு அனுப்பிவைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வந்து கண்டி வைத்தியசாலையில் பரிசோதித்தபோது தனது வயிற்றில் மேலும் இரண்டு ஆணிகள் இருந்ததை எக்ஸ்ரேயில் காட்டியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு மருத்துவர்களால் ஒரு ஆணி எடுக்கப்பட்டதாகவும் மற்றொரு ஆணி தனது வயிற்றின் பின்புறத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டபோதிலும், உரிய முறையில் பதிலளிக்கவில்லை எனப் பாதிக்கப்பட்ட பெண்ணின் தாய் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான தகவல்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகளுடன் வத்தேகம பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்ததாகத் தாய் குறிப்பிட்டுள்ளார்.

கணவனைப் பிரிந்து குழந்தையுடன் தனியாக வாழும் தனது மகள், குழந்தையின் எதிர்காலத்திற்காக வெளிநாடு சென்றதாகக் கண்ணீருடன் தெரிவித்தார்.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் யாருக்கும் நடக்க இடமளிக்க வேண்டாம் எனவும் அவர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தியாக தீபம் திலீபனின் நினைவஞ்சலி நிகழ்வுகள்!



யாழ்ப்பாணத்தில்...



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்...



கிளிநொச்சியில்...





வேலணை வங்களாவடிச் சந்தியில்...



முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில்...




பிரான்ஸ் தலைநகர் பாரிஸில்...

படங்கள்: பு.கஜிந்தன்

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**ரிஷபம்:** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**மிதுனம்:** இன்று உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் பொருளாதாரச் சிக்கல்களை சந்திப்பீர்கள்.

**கடகம்:** எதற்கும் அவசரம் வேண்டாம். மௌனம் காப்பது தேவையற்ற டென்ஷனால் மனதையும் உடலையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**சிம்மம்:** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள். மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**கன்னி:** சுயத்தொழில்மூலம் நன்மைகள் இலாபங்கள் உண்டு. உடல், மனநோய்களால் சற்றுதொந்தரவுகள் உண்டு.

**துலாம்:** வீணான மனக்கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களை குறைத்துக்கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**தனுசு:** உங்கள் தேவைக்கான பணம் கிடைக்கும். மனத் துணிவுடன் உங்கள் காரியங்களில் வெற்றி கொள்வீர்கள்.

**மகரம்:** யாருக்கும் வாக்குறுதியளிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவது சிலபிரச்சினைகளை ஏற்படுத்தும், எச்சரிக்கை வேண்டும்.

**கும்பம்:** மனதில் ஒருவித பய உணர்வு, படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**மீனம்:** தேவையற்ற பயணங்களையும் செலவுகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**திதி:** திரியோதசி பி.ப.10.19 வரை பின் சதுர்தசி
**நட்சத்திரம்:** அவிட்டம் மு.ப.7.10 வரை பின் சதயம்
**யோகம்:** அமிர்த யோகம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப. 8.59 – 9.59 மணிவரை
**ராகு காலம்:** 11.59 – 1.29 மணிவரை
**எமகண்டம் :** 7.29 – 8.59 மணிவரை
**குளிகை :** 10.29 – 11.59 மணிவரை
**சந்திராஷ்டமம்:** கடக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிர்ஷ்டம்:** மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** பிரதோஷ விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## உலப்பனையில் ஒரு இலட்சம் கிலோ பாவனைக்கு உதவாத கழிவுத் தேயிலை மீட்பு



கலஹா செய்தியாளர்

கம்பளை, உலப்பனை பொருளாதார மத்திய நிலையத்தில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் அனுமதிப்பத்திரமின்றி இரகசியமாக மறைத்து வைத்திருந்த ஒரு இலட்சம் கிலோகிராமுக்கும் அதிகமான மனித பாவனைக்கு உதவாத கழிவுத் தேயிலை ஹெட்காலை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஹெட்காலை பொலிஸார் வீதி சோதனையில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் சந்தேகத்துக்கிடமான லொறி ஒன்றினை சோதனை செய்துள்ளனர்.

அதன்போதே, அதற்குள் அனுமதிப் பத்திர மின்றி ஹட்டன் டிக்கோயா பிரதேசத்திலிருந்து உலப்பனை பகுதிக்கு கடத்தி வரப்பட்டதாக சந்தேகிக் கப்படும் 10ஆயிரத்து 500 கிலோகிராம் கழிவுத் தேயிலை இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு லொறியின் சாரதியை கைதுசெய்து, அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின்போதே மேற்குறிப்பிட்ட களஞ்சிய சாலை அடையாளம் காணப்பட்டுள்ளது.

பின்னர் நேற்று முன்தினம் (25) மாலை தேயிலை சபையின் கம்பளை கிளை அதிகாரிகளுடன் இணைந்து பொலிஸார் குறித்த களஞ்சிய சாலையினை சோதனையிட்டதுடன் இரசாயன பரிசோதனைகளுக்காக தேயிலை மாதிரிகளை சேகரித்தனர்.

பொலிஸாரின் விசாரணையின்போது, குறித்த களஞ்சியசாலையின் உரிமையாளர் சமுகமளிக்காததால் அவரை கைது செய் வதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக தெரிவித்து நிதிமோசடி செய்த நபர் கைது

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி, குவைத்தில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்து பண மோசடி செய்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊவா மாகாணத்தின் புலம்பெயர்ந்தவர்களின் சொத்து பாதுகாப்பு நிலையத்தின் அதிகாரிகளினால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குவைத்தில் களஞ்சிய உதவியாளருக்கான தொழில்வாயப்பு இருப்பதாகவும் அதற்காக 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி தேவைப் படுவதாகவும் சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, பதுளை நகரை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்த 08 பேரை ஏமாற்றி மொத்தமாக 26 இலட்சம் ரூபாவுக்கும் அதிக நிதியை பெற்றுக்கொண்டுள்ளார்.

அவர் கோரியது போன்று பணத்தை பெற்றுக்கொடுத்திருந்தாலும் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்காமையின் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊவா மாகாண அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் அதற்கமைய கம்பளை, அடபாகே தோட்டத்தைச் சேர்ந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பணியகத்தின் சட்ட ரீதியான அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பணியாளர்களை இணைத்துக்கொள்ளுதல் மற்றும் அநீதியான முறையில் பணம் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கடந்த 24ஆம் திகதி பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அதனை தொடர்ந்து சந்தேகநபரை இன்றுவரை (27) சிறையில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மைத்ரிக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீக்கம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை நீக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (26) தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேனவினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு அனுப்பப்பட்ட விளக்கக் கடிதத்தை செயற்படுத்துவதைத் தடுக்கும் வகையில் நீதிமன்றம் இதற்கு முன்னர் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த வழக்கில் உண்மைகளை மறைத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தனது சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் ஊடாக இந்த தடை உத்தரவை நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

உண்மைகளை கருத்திற்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதான, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகப் பணியாளர்களுக்கு பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்க தீர்மானித்தார்.

## தாதியர் சேவையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்







பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அகில இலங்கை தாதியர் சங்கத்தினர், கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் பிரதான அலுவலகத்துக்கு முன்பாக நேற்று (26) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக நேற்று கொழும்பு நகரமண்டபம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால், தாதியர்களை சேவைக்கு இணைத்துக்கொள்வதற்காக தரம் தொடர்பில் கவனம் செலுத்தாமை, டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பை முழுமைசெய்த சகலரையும் சேவைக்கு இணைத்துக் கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக அந்த பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

படப்பிடிப்பு: எஷான் தசநாயக்க

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 27ஆம் திகதி, புதன்கிழமை

# மனோ காட்டிய எதிர்ப்பின் நியாயம்!.

கொழும்பு கல்வி வலயத்தில் மாணவர் தொகை குறைந்த சிங்களப் பாடசாலைகளை அருகாமையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சியை, 'தேசிய நல்லிணக்கம்' என்ற பெயரில் சிலர் முன்னெடுக்க முயல்வதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சாடியுள்ளமை எமது கவனத்தை ஈர்த்துள்ளது.

''மாவட்டங்களின் கல்வி நிர்வாக சீர்திருத்தங்களுக்கு எனது நண்பர் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் முயற்சிகளுக்கு நான் ஒத்துழைப்பு வழங்குகிறேன். அவை பற்றி பாராளுமன்றத்தில் கல்வியமைச்சு ஆலோசனை குழு, கல்வி மேற்பார்வை குழு, கொழும்பு மாவட்ட மற்றும் பிரிவு ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் நாம் பார்த்துக்கொள்கிறோம். அதிகாரமும் மக்கள் ஆணையும் இல்லாத நபர்களின் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு இடம் கொடாதீர். உண்மையான நல்லிணக்கம் உருவாக, வளர்ச்சியடைந்த கொழும்பு பாடசாலைகளான ரோயல் கல்லூரி, இசிபதன கல்லூரி, டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி ஆகியவற்றில் திட்டமிட்டு குறைக்கப்படும் தமிழ் வகுப்புகளை கூட்டுங்கள். வளர்ச்சியடைந்த ஆனந்தா கல்லூரி, நாலந்தா கல்லூரி, விசாகா கல்லூரி ஆகியவற்றில் தமிழ் மொழி பிரிவுகளை ஆரம்பியுங்கள். இதன்மூலம் தமிழ் மொழிமூல பிள்ளைகளுக்கு வளர்ச்சியடைந்த நல்ல கல்வி வாய்ப்புகளை வழங்குங்கள். இதை செய்யாமல், எம்மிடம் எஞ்சியிருக்கும் கல்வி வாய்ப்புகளையும் பிடுங்க முயலும் இத்தகைய போலி நல்லிணக்கத்துக்கு கொழும்பு மாவட்ட எம்.பியான மனோ கணேசன் ஒருபோதும் இடம்கொடுக்க மாட்டேன்'' என மனோ கணேசன் எம்.பி. மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு கல்வி வலயத்தில் வடகொழும்பு கோட்டத்தில், கலைமகள் தமிழ் வித்தியாலயத்துடன் அருகிலுள்ள சிங்கள மொழி பாடசாலையை இணைக்கும் இரகசிய முயற்சி பகிரங்கமானதையடுத்து மனோ எம்.பி., கொழும்பு கல்வி வலய பணிப்பாளர் தேவபந்துவுக்கு தொலைபேசியில் அறிவித்து விட்டு, எழுத்துமூலம் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளதாக அறியமுடிகின்றது.

தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் ஒரு அரசு சார்பற்ற தொண்டு நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் இந்த முயற்சியை ஒருசில மதத்தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனம் உட்பட அரசியல்வாதி ஒருவரும் இதில் தொடர்புற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நல்லிணக்கம் என்ற பெயரில் கொழும்பில் இப்போது அரங்கேறும் பல நிகழ்வுகளில் மேற்படி தமிழ்ப் பாடசாலைகளை சிங்களப் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சி இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட சிங்களத்துடன் தமிழ் ஐக்கியமாகி அப்படியே தமிழ் மாணவர்கள் காலப்போக்கில் சிங்களத்தை மாத்திரம் கற்று தமிழை உப பாடமாக கற்கும் நிலைமையினையே இது ஏற்படுத்துமென்பது கல்வியாளர்களின் கருத்து. அது மட்டுமல்ல, சில இடங்களில் தமிழ்ப் பாடசாலைகளை முழுமையாக சிங்களப் பாடசாலைகளுடன் இணைத்துவிட்டால் தமிழ்ப் பாடசாலைகளின் பெறுமதிமிக்க காணிகளும் சுவீகரிக்கப்படும் அபாயம் இருக்கிறது.

புறநகர்ப் பகுதிகளில் உள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பிரபலமான பாடசாலைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதால் சாதாரண நிலையிலுள்ள அரச பாடசாலைகளில் தமிழ்ப் பேசும் மாணவர்களின் எண்ணிக்கையில் பின்னடைவு இருக்கிறது. அதுவே காலப்போக்கில் அந்தப் பாடசாலையின் வீழ்ச்சிக்கும் ஏதுவாகிறது. இதனை தமிழ்ப் பேசும் சமூகங்கள் உணர்ந்தாக வேண்டும். இப்போது பெரும்பான்மை இன பாடசாலைகளுடன் சேர்க்கப்பட திட்டமிடப்படும் தமிழ் அல்லது முஸ்லிம் பாடசாலைகள் ஒருகாலத்தில் அதிகபட்ச மாணவர்களை கொண்டிருந்தன என்பதை நாம் உணர்ந்ததாக வேண்டும்.

எவ்வாறாயினும், த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் இந்த விடயத்தில் தலையிட்டமைக்காக தமிழ்ச் சமூகம் நன்றி தெரிவிக்க கடப்பட்டிருக்கிறது. இதனை கவனிக்காமல் விட்டிருந்தால் அமைதியாக விடயங்கள் அரங்கேறியிருக்கும். இப்போது இதனை தடுத்தாலும் இனிமேல் விழிப்பாக இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. சிங்களப் பாடசாலைகளில் தமிழ்ப் பாடசாலைகளை இணைப்பதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படுமென்றோ அல்லது தமிழ்க்கல்வியில் மேம்பாடு ஏற்படுமென்றோ நினைப்பது பகற்கனவாகவே இருக்கும். ஏற்கனவே, பள்ளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் தமிழ்க் கல்வியினை மேலும் அதலபாதாளத்தில் தள்ளிவிடாமல் காக்கவேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும். மக்கள் பிரதிநிதி என்ற ரீதியில் மனோ காட்டிய அந்த துணிச்சலை முன்னெடுத்துச் சொல்லவேண்டியது தமிழ்ச் சமூகத்தின் தமிழ் பேசும் இனக்குழுமங்களின் பொறுப்பாகும்.

## இன்றைய நாளில்...

- 1791 – யூதர்களுக்கு முழுமையான குடியுரிமை வழங்குவதற்கு பிரான்ஸின் பாராளுமன்றம் வாக்களித்தது.
- 1825 – உலகின் முதலாவது பயணிகள் நீராவித் தொடரூந்து இங்கிலாந்தில் சேவைக்கு விடப்பட்டது.
- 1947 – தென்னிந்திய திருச்சபை சென்னையில் நிறுவப் பட்டது.
- 1949 – சேங் லியோன்சாங் சீனாவின் கொடியை வடிவமைத் தார்.
- 1962 – யெமன் அரபுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1994 – மியான்மரில் இராணுவ ஆட்சியை எதிர்க்க மக்களாட்சிக்கான தேசிய அமைப்பை ஆங் சான் சுகி உருவாக்கினார்.
- 1998 – கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் 2 நடவடிக்கை மூலம் வெற்றி கொள்ளப்பட்டது.
- 1998 – கூகுள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்டது.
- 2007 – நாசா டோன் விண்கலத்தை சிறுகோள் பட்டையை நோக்கி ஏவியது.
- 2008 – சீன விண்வெளி வீரர் சாய் சிகாங் விண்வெளியில் நடந்த முதலாவது சீனர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

# தீதும் நன்றும் பிறர்தர வாரா...

**கிருங்கை சேதுபதி**



நாட்டுப்புறப் பேச்சு வழக்கில் 'கள்வர் பலம் பெரிதா, காப்பார் பலம் பெரிதா' என்று ஒரு கேள்வி கேட்பார்கள். புரியாது விழிக்கும்போது, மற்றொரு கேள்வியைத் தொடுப்பார்கள்.

'ஒரு ஊரில் பெரிய திருவிழா நடக்கிறது. அது அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெறுவதற்கு யார் காரணம்? அங்கே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுகிற, பாதுகாக்கிற பொலிஸார் அதிகம் இருப்பார்களா? அமைதியாகவும் நல்லவிதமாகவும் நடக்கிற பொதுமக்கள் அதிகம் இருப்பார்களா?'

விடை தெரிந்துவிடும். மக்கள்தான் அதிகம். அடுத்த கேள்வி எழும். அத்தனை மக்களையும் பொலிஸாரோ இராணுவமோதான் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறதா? அதாவது சட்ட ஒழுங்குக்குப் பயந்து நாம் குற்றங்கள் செய்யாமல் இருக்கிறோமா? அல்லது நல்லவர்களாக இருப்பதனால் குற்றங்கள் செய்வது குறைந்திருக்கிறதா?' மூன்றும் தான் என்றாலும், முன்னதைவிட, பின்னதுதான் முக்கிய காரணம்.

இந்தப் பதிலை எடுத்துக்கொண்டு, இதற்கு முன்னர் எழுப்பிய வினாவுக்குச் சொன்ன பதிலுக்கு வருவோம். காவலரின் எண்ணிக்கையைவிட, மக்களின் எண்ணிக்கைதான் அதிகம். அப்படி இருக்கத் திருட்டும் சமூகத் தீங்குகளும் எப்படி நடக்கின்றன?

அந்த மக்களுக்குள்ளேதான் கள்வர்கள் இருப்பார்கள். சமூக விரோதிகள் கலந்திருப்பார்கள். தங்களைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இருப்பார்கள். கருதியது முடித்தபின் மக்கள் திரளில் கலந்து விடுவார்கள். அவர்கள் எப்படி இருப்பார்கள்?

'மக்களே போல்வர் கயவர்' என்கிறார் திருவள்ளுவர். 'அவர்கள் மக்களைப் போல இருப்பார்கள். ஆனால், அவர்களுக்கு ஒப்பானவர்களை நான் பார்த்ததே இல்லை' என்கிறார். அதாவது உருவத்தால் அவர்கள் மக்களைப் போலவே இருப்பார்கள். உள்ளத்தால் அவர்கள் எப்போது என்ன செய்வார்கள் என்றே தெரியாது. எதையும் செய்கிற அவர்கள் 'தேவைப்பட்டால் தன்னையே கூட விற்று விடுவார்கள்' என்கிறார்.

அதனால்தான் அதிக அளவில் மக்கள் கூடும் திருவிழாக் கூட்டங்களில், பண்டிகை நாட்களின்போது பஸ், ரயில் நிலையங்களில், பொலிஸார் அடிக்கடி எச்சரிக்கையாய் இருக்கும்படி அறிவிப்பு விடுப்பார்கள். 'ஓடும் ரயிலில் பக்கத்தில் இருப்பவர்கள் பழமோ, பிஸ்கட்டோ, உணவுப் பண்டமோ கொடுத்தால் வாங்கி உண்ணாதீர்கள். அதில் மயக்க மருந்து கலந்திருக்கலாம். நீங்கள் மயங்கிய வேளையில், உங்கள் நகைகள், பொருட்களை அவர்கள் எடுத்துச் சென்று விடுவார்கள்' என்பார்கள்.

இதனைவிடவும் ஆபத்தான அறிவிப்பு, 'திருடுபவர்கள் உங்களுக்குப் பக்கத்திலேயே இருக்கலாம். அறிமுகம் இல்லாவர்களிடம் ஜாக்கிரதையாக இருங்கள். அவர்கள் உங்களிடம் நட்பாகப் பேசி, நகையை, பணத்தைத் திருடிவிடுவார்கள்'. அதாவது, உடன் பயணிக்கும் மனிதர்களையே நம்பமுடியாதபடிக்கு மக்களோடு மக்களாக, கலந்து பழகுவதற்கு இனியவர்களாக இருப்பவர்கள், இவர்கள்.

ரயில் நட்பு, பயண நட்பெல்லாம் இப்போது இல்லாதபடிக்கு, இந்தப் பயம் வந்து கௌவிவிடுகிறது. ஆனால், இந்த எச்சரிக்கைகளையெல்லாம் தாண்டி, நம்மை நாமே ஏமாளிகளாக ஆக்கிக்கொள்ள, நம் கைவசம் இருக்கும் கைப்பேசிகளே போதுமானவையாக இருக்கின்றன.

எந்தநேரமும் நம் கண்ணும் கருத்தும் கவனமாகக் கைப்பேசிகளையே நோக்கிக் கொண்டிருக்கும்போது, புற உலகைப் பற்றிய பிரக்ஞை எப்படி இருக்கும்?

தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளத் தெரியாவிட்டால், எந்த அளவுக்குக் காவலர்கள் வந்து நம்மைக் காப்பார்கள்? அவரவரும் சொந்த அனுபவத்தில் எத்தனை பொருட்களை, இவ்வாறு இழந்திருக்கிறோம். அதிலும் பையில் வைத்திருக்கும் பணத்தை இழந்தவர்களை விடவும், கைப்பேசிகளை இழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்கிறார்கள்.

எத்தனை ஜாக்கிரதையாக இருந்தாலும் எப்படியாவது ஏமாற்றிவிடுவதில், இவர்கள் சமர்த்தர்கள் என்பதை விடவும், பல சமயங்களில் நாம் ஏமாந்தவர்களாகவே இருந்துவிடுகிறோம் என்பதுதானே உண்மை. எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. என்றாலும் ஏமாறாமல் இருக்க நம்மால் முடிகிறதா?

இந்தத் திருட்டும் கயமையும் பிறரிடம்தான் இருக்கிறது. நாம் நல்லவர்களாக இருக்கிறோம் என்று நம்புகிறவர்கள் நம்மில் அதிகமாக இருக்கிறோம். அதுதான் நம்மையும் இந்தச் சமூகத்தையும் அதிகம் காப்பாற்றுகிறது. வீட்டின் கதவுகளை மூடிப் பூட்டிவிட்டு ஊருக்குக் கிளம்புகிறோமே, அந்தப் பூட்டா வீட்டையும் வீட்டில் உள்ள பொருட்களையும் பாதுகாக்கிறது? நம்மிடம் இருக்கிற நம்பிக்கைதான் மெய்யான பாதுகாப்பு.

இந்த நம்பிக்கை தன்னம்பிக்கையாக மட்டும் இருந்தால் போதாது. நாம் பலரின் நம்பிக்கைக்கு உரிய பாத்திரமாகும்போதுதான், நம் பலம் கூடுகிறது. அது அன்பால், அருளால், பிறர்க்குச் செய்யும் உதவியால் வருவது. நமக்கு ஒன்று வந்துவிட்டால், அது தனக்கு வந்ததாக எண்ணிக் காப்பாற்ற வருபவர்களைப் பெருக்குவதற்கும் பேணுவதற்கும் இந்தத் தன்மை வேண்டும்.

பக்கத்து வீட்டில் தீப்பிடித்தால் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதோ, அப்படித்தான் அடுத்த வீட்டில் தீமை நடந்தாலும் தடுத்து நிறுத்த நாம் தயாராகவேண்டும். நெருக்கடி மிகுந்த நகரங்களைவிடவும், சிற்றூர்களில் இந்தத் தன்மை மிக அதிகம். அங்கே, விட்ட பொருள் விட்ட இடத்தில் இருக்கும் என்பதைவிட, எடுத்தவர்கள் உரியவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிற பழக்கமும் இருந்ததே.

பொருட்கள் மட்டுமல்ல, பொருளாதாரத்துக்கு முக்கியமான நாணயத்துக்கும் இந்த நம்பகத்தன்மை இருந்தது. நாணயத்துக்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல, இந்த நாணயத்துக்கும் இரு பக்கங்கள் இருக்கின்றன. சொல்லிலும் செயலிலும் நம்பகத்தன்மை மிகுந்த நாணயம் இருக்கிற இடத்தில் நம்பிக்கை மோசடி, ஏமாற்று என்று எதுவும் இருக்காது.

பொதுவாக, மனிதன் நல்லவன்தான். ஆனால், சந்தர்ப்ப சூழல் அவனை அவ்விதம் ஆக்கிவிடுகிறது என்பது மெய்தான். அதற்குக் காரணம், வறுமை. அனைத்துப் பாவங்களையும் செய்யத் தூண்டுகிற பாவியை, 'இன்மை என ஒரு பாவி' என்றார் திருவள்ளுவர். வறுமைக்குத் திருடுகிறவனிடத்தில் கூட, ஒரு நியாயம் இருக்கும்.

அதைவிடவும் ஆபத்தான பேர்வழி, 'அழுக்காறு உடையவன்'. அனைத்து அழுக்குகளையும் கொண்டுவந்து சேர்க்கிற வழியான மற்றவர் வாழ்வது கண்டு பொறுக்காதவன் அவன். அவனை அவ்விதம் ஆக்குகிற பாவி, 'அழுக்காறு என ஒரு பாவி.'

தன்னிடம் இல்லாத ஒன்று பிறரிடம் இருக்கிறது என்றதும், தன்னிரக்கம் வரும். அதனை அடைய வேண்டும் என்கிற எண்ணம் வரும். எப்படியாவது அடைய வேண்டும் என்கிற எண்ணம் வந்துவிட்டால், அதனை அறமல்லாத வழிகளில் அடையத் தோன்றும். திருட்டும் அதனைத் தொடர்ந்து பொய்யும் அதனைத் தொடர்ந்து போலித்தனமான நடிப்பும் வந்துவிடும்.

திருடுவதைவிட, திருட வேண்டும் என்கிற எண்ணம் தோன்றுவது மிகப்பெரிய ஆபத்து. அதனால்தான், பிறர் பொருளைக் கள்ளத்தனமாகக் கவர்ந்துவிடலாம் என்று உள்ளத்தாலும் நினைப்பது கூடத் தீது என்கிறார் திருவள்ளுவர்.

அதற்காகத்தான் பெரியவர்கள் குழந்தைகளுக்கு, 'பொய் சொல்லக் கூடாது, புறம் சொல்லல் ஆகாது' என்று அறம் சொல்லிச் சொல்லி வளர்த்தார்கள். அப்போது பொய் என்றால் என்ன என்று கேட்கிற குழந்தைகள் கூட இருந்தன என்பது மெய்.

குழந்தைகள் சொல்வதைக் கேட்பதை விடவும், காண்பதைப் பின்பற்றுகிறவர்களாகவே இருப்பார்கள். அடுத்தவர்களின் பொருளுக்கு ஆசைப்படுவதைவிட, அடுத்த குழந்தைகளின் அறிவைக் காட்டி, இந்த அழுக்காற்றை, தத்தம் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் போல் ஊட்டிவிடுகிற பெற்றோர் இருக்கின்றனர்.

நாம் சொல்லாத பல தன்மைகளைக் காட்சி ஊடகங்கள் பல்வேறு கோணங்களில் காட்டிவிடுகின்றன. எல்லாவற்றுக்கும் ஒரு நியாயம் இருந்தாலும் கூட, அவற்றை அழுத்தமாகக் கற்பிக்கும் அவை, பொதுநியாயங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகின்றன. அதுதான் சமூகத்துக்குப் பெருங்கேடு.

'அறம் தவிர்த்துச் செய்யப்படுகிற எந்த ஆக்கமும் கேடு விளைவிக்கும்' என்கிற அடிப்படையான தார்மிக உணர்வை, நம் முன்னோர்கள் இயல்பாகக் கொண்டிருந்தார்கள். நம்மைவிடவும் வசதிக்குறைவுகளையும் வறுமைத் துன்பங்களையும் அவர்கள் இயல்பாக ஏற்றிருந்தார்கள். பட்டினி கிடந்தபோதும் ஏதும் இல்லாத போதும் அவர்கள் வாழ்வில் அறம் இருந்தது. இன்றைக்கு இருக்கும் அளவுக்குச் சமூகத் தீங்குகள் இல்லை.

வறுமைக்கு மாற்று பணம் என்றும் வசதி என்பது பிறர் பொறாமைப்பட வாழ்வது என்றும் வந்த பிறகு, என்ன செய்தேனும், எப்படியாகிலும் பணக்காரர்களாகிவிட வேண்டும். ஆடம்பரமாக இந்த வாழ்வை அனுபவித்துத் தீர்க்க வேண்டும் என்கிற வெறி மனித வாழ்வின் இலக்காகிவிட்டது. அதுதான் முன்னேற்றம் என்று ஆகிவிட்டது.

இன்றைக்கு இருக்கும் வரம்புமீறிய வசதிப் பெருக்கம் கூட, இல்லாதவர்களைக் கயவர்களாக்கிவிடுகிற ஆபத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது. இன்மை என ஒரு பாவியும் அழுக்காறு என ஒரு பாவியும் இணைந்து மனிதர்களை மனிதத் தன்மை இல்லாதவர்களாக ஆக்கிவிடுகிறது.

மனிதர்கள் பாவிகள் அல்லர். அவர்களைப் பாவம் செய்யத் தூண்டுகிற அழுக்காறும், இன்மையும் தான் பாவிகள். இவற்றுக்கு மருந்து, உழைப்பும், நேர்மையும்தான். அதனைத் தவிர்த்துப் பெரிய மனிதர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்பவர்கள் பொதுவெளியில் செய்கிற அறமற்ற செயல்களால் கயவர்கள் உற்பத்தியாகிறார்கள். நமக்கு எதிரி கயவர்கள் அல்லர். நமக்குள்ளே இருக்கிற இந்தக் கயமை உணர்வு தான்.

எனவே, புறத்தே இருக்கிற செல்வங்களைக் கள்வர்களிடமிருந்து காப்பது எவ்வளவு முக்கியமோ, அதைவிடவும் அகத்தே இருக்கிற அழுக்காற்றை அகற்றி, அறத்தைச் சிதைக்கிற கயமையை முளையிலேயே கண்டு நீக்கி விடுவதுதான் எல்லார்க்கும் இன்றியமையாதது. அறமே திறம். மற்றவை எல்லாம் அப்புறம்தான்.

இப்போது, முன்னர் எழுப்பிய கேள்வியை மீளவும் எண்ணிப் பாருங்கள், கள்வர் பலம் பெரிதா? காப்பவர் பலம் பெரிதா? பலவீனங்கள் நமது பலத்தைக் கொள்ளை கொள்ள வரும்போது காப்பதே முதற் கடமை.

கள்வரும் நம்முளே, காப்பவரும் நம்முளே. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா'.

நன்றி - தினமணி

## நக்கல் நமசிவாயம்

**இந்தியாவோடயும் சீனாவோடயும் ரணில் மல்லுக்கட்டுறத கோட்டாபய பார்த்தாரென்றால் பதவியில் இல்லாமல் போனது எவ்வளவு நல்லதென்று யோசிப்பாரா இருக்கும்..**



# அமைச்சரவைத் தீர்மானங்கள்




**2023.09.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. காட்டுத்தீ ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

மனிதர்களால் காட்டை அண்டிய பகுதிகளில் மேற்கொள்கின்ற தீ மூட்டல்களால் குறிப்பாக, வரட்சியான காலநிலை நிலவுகின்ற காலங்களில் காட்டுத்தீ ஏற்படுகின்ற ஆபத்துகள் அதிகரித்து வருகின்றன. பதுளை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, மொனறாகலை, பொலன்னறுவை, குருநாகல், புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இந்நிலைமை அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாண்டில் இதுவரைக்கும் 150 காட்டுத்தீக்கள் பதிவாகியுள்ளதுடன், அதனால் 2,600 ஹெக்ரெயார் காடுகள் அழிவடைந்துள்ளன. ஆகவே, தேசிய மட்டத்திலிருந்து கிராம மட்டம் வரைக்கும் அரச பொறிமுறையிலும், ஏனைய பங்காளர்களின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொண்டு காட்டுத்தீ ஏற்படுவதைத் தடுப்பதற்கும், அதனை அணைப்பதற்குமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. பண்டாரநாயக்கா சர்வதேச இராஜ தந்திர பயிற்சி நிறுவனம் மற்றும் ஜோர்ஜியா வெளிவிவகார அமைச்சின் லெவன் மயிக்லட்சே இராஜதந்திர பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத் துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

நிபுணத்து அறிவுப் பரிமாற்றம், கல்வியாளர்கள் பரிமாற்றம், மாணவர்கள் பரிமாற்றம், ஒன்றிணைந்த ஆய்வு வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட கற்பித்தல் பொறிமுறைகள் மற்றும் ஏனைய குறித்த துறைகள் தொடர்பான ஒத்துழைப்புகளை ஏற்படுத்துவதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் மற்றும் ஜோர்ஜியா வெளிவிவகார அமைச்சின் லெவன் மயிக்லட்சே இராஜதந்திர பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, இருநாடுகளுக்கிடையில் இராஜ தந்திரத் தொடர்புகள் ஏற்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு குறித்த உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. முத்துராஜவெலவுக்கு அண்மையிலுள்ள கடலில் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக பயன்படுத்தப்படும் நங்கூர மிதவைக்குத் (Mooring Bouy) தேவையான உதிரிப்பாகங்கள் பெறுகைக் கோரல்**

முத்துராஜவெலவுக்கு அண்மையிலுள்ள கடலில் பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்காக பயன்படுத்தப்படும் நங்கூர மிதவைக்குத் தேவையான கடலில் மிதக்கின்ற 26 இறப்பர் குழாய்கள் மற்றும் அதற்குரிய உதிரிப்பாகங்களின் பெறுகைக்காக சர்வதேச போட்டி விலைமுறிப் பொறிமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக தனியொரு விலைமனு மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த விலைமனுவை மதிப்பீடு செய்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பெறுகையை M/s Yokahama Industrial Products Asia Pacific (pte) Lt இற்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. எதிர்வரும் நான்கு (04) மாதகாலத்துக்கு 04 கப்பல் டீசல் தொகையைக் கொள்வனவு செய்தல்**

2023.11.01ஆம் திகதி தொடக்கம் 2024.02.29ஆம் திகதி வரைக்கும் தொடர்ந்து வரும் நான்கு (04) மாதகாலத்துக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 04 கப்பல் டீசல் தொகையைக் கொள்வனவு செய்வதற்காக நீண்டகால ஒப்பந்த முறையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்காக 05 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய M/s Petrochina International (Singapore) Pte. Ltd.இற்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. ஐக்கிய அரபு எமிர் இராச்சியத்தின் டுபாய் நகரில் இடம்பெறுகின்ற காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பணி வரைபு உடன்படிக்கையின் பங்காளர்களின் 28ஆவது மாநாடு**

காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பணிவரைபு உடன்படிக்கையின் பங்காளர்களின் 28ஆவது மாநாடு (COP 28) 2023.11.30ஆம் திகதி தொடக்கம் 2023.12.12 வரை ஐக்கிய அரபு எமிர் இராச்சியத்தின் டுபாய் நகரில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு, காலநிலை மாற்றத்தால் அதிக இடர்களுக்குள்ளாகக்கூடிய நாடுகளுடன் இணைந்து, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் எதிர்பார்ப்புகள் தொடர்பாக பொதுவாகக் குரலெழுப்புவதற்கும், அதற்காக அபிவிருத்தியடைந்த நாடுகளின் வாக்குறுதிகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு குறித்த நாடுகளை ஈடுபடுத்துவதற்காக "காலநிலை நீதிப் பேரவை" (Climate Justice Forum) எனும் பெயரிலான கட்டமைப்பை உருவாக்குவதற்கான முன்மொழிவை இலங்கை சமர்ப்பிக்கவுள்ளது. அதற்கமைய, ஐக்கிய நாடுகள் சபையின் பணிவரைபு உடன்படிக்கையின் பங்காளர்களின் 28ஆவது மாநாட்டில் கலந்துகொள்கின்ற பிரதிநிதிகள் குழுவின் முனைப்பான பங்கேற்புக்காக அரச அரங்க (Country Pavilion) மாநாடு இடம்பெறுகின்ற காலப்பகுதியில் மேற்கொண்டு செல்வதற்கும், காலநிலை மாற்றங்களுக்குரிய தேசிய மட்டத்திலான தொடக்க முயற்சிகளை இப்பேரவையில் காட்சிப்படுத்தவும் சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்துக்கான திருத்தம்**

சமூகத்திலுள்ள இயலாமையுடன் கூடிய பிள்ளைகளின் நல்லாரோக்கியத்துக்கு முன்னுரிமையளித்து அவர்களுக்கு பரந்தளவிலான பாதுகாப்புக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக சட்டபூர்வமான நிறுவனமாக நிறுவப்பட்டுள்ள அல்லது சமூகசேவை அமைப்பாக பதிவு செய்வதற்கான எந்தவொரு சட்டத்தின் கீழும் பதிவுசெய்யப்பட்டுள்ள, அரசின் சுகாதார சேவைகள்/கல்விக் கட்டமைப்புடன் இணைந்து குறித்த பிள்ளைகளுக்கு சுகாதார வசதிகளை வழங்குகின்ற எந்தவொரு தொண்டு நிறுவனத்திற்கும் வரிச்சலுகை கோருவதற்கு இயலுமாகும் வகையில் உண்ணாட்டரசு இறைவரியைத் திருத்தம் செய்வது பொருத்தமானதென முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, அதற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகளை உள்ளடக்கி உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பதில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கொள்கை அடிப்படையிலான விசேட கடன் வசதிகளைப் பெறல்**

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 02 துணை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வீதம் கொள்கை அடிப்படையிலான 02 கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. அதன் முதலாவது துணை வேலைத்திட்டத்தின் கீழ் நெருக்கடி முகாமைத்துவப் பணிவரைபு மற்றும் நிதிப்பிரிவின் உறுதிப்பாட்டை மேம்படுத்தலுக்காக துரித மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், இரண்டாவது துணை வேலைத்திட்டத்தின் கீழ் மீள்தகவு கொண்ட அனைத்தையும் உள்ளடக்கிய நிதி முறைமையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. முதலாவது துணை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 2 வீதமான வருடாந்த வட்டி வீதத்தில், 05 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக 25 வருடகால மீள்செலுத்தல் தவணைக் காலத்துக்குக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. அரச கடன் முகாமைத்துவ நிறுவனத்தை நிறுவுதல்**

2022ஆம் ஆண்டின் இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தில் நிறுவன மீள்கட்டமைப்பாக சுயாதீன அரச கடன் முகாமைத்துவ நிறுவனமொன்றை நிறுவுவதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதுடன், கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மை, சர்வதேச நாணய நிதி விரிவாக்கக் கடன் வசதிகளின்கீழ் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள துறைகளாகக் கண்டறியப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள கடன் முகாமைத்துவ நிறுவனத்தைத் தாபிப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி தொழிநுட்ப ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளன. குறித்த பங்காளர்களுடன் கலந்துரையாடிய பின்னர், கடன் முகாமைத்துவ மறுசீரமைப்புத் திட்டம், கடன் முகாமைத்துவ நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் சட்ட வரையறை போன்றன தற்போது திட்டமிடப்பட்டுள்ளன. அதற்கமைய, கடன் முகாமைத்துவ சட்டமூலத்தைத் தயாரிக்கு மாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற் காக பதில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2024 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2024 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2023.07.31ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2024 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் மர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.





ஐக்கிய இலங்கை ஸ்ரீ ஜெய் ப்ரத்யங்கிரா குரு பீடம் குறைந்த வருமானம் பெறும் 300 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்களும், 100 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு எஸ்.விநாயகர் தலைமையில் பொரளை வை.எம்.பி.ஏ. கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதம அதிதியாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி செயலக பிரதானியுமான சாகல ரத்நாயக்க கலந்துகொண்டார்.

# பின்னவல - கித்துல்கல சுற்றுலா வலயங்களின் அபிவிருத்தி குறித்து அரசாங்கம் விசேட கவனம்





இரத்தினபுரி நிருபர்

பின்னவல மற்றும் கித்துல்கல சுற்றுலா வலயங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் அண்மையில் பின்னவலவில் இடம்பெற்றது.

அதன்பின்னர், சப்ரகமுவ ஆளுநர் நவின் திசாநாயக்க பின்னவல யானைகள் சரணாலயத்துக்குச் சென்று அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் பராமரிக்கப்பட்ட யானையான சுரதலா மெனிகாவின் நலன்களை கேட்டறிந்தார்.

பின்னவல யானைகள் சரணாலயத்தின் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இதன்போது கருத்து தெரிவித்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க,

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளது. தாய்லாந்து போன்ற நாடுகளின் யானைகள் சரணாலயம் உள்ள முறையில் புதிய யுக்திகளை கையாள வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

மேலும், சுற்றுலாத்துறையில் யானை சரணாலயம் மற்றும் புதிய சந்தைப்படுத்தல் திட்டம் தனியார் துறையின் தலையீட்டுடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

பின்னவல சுற்றுலா வலயம் மற்றும் கித்துல்கல சுற்றுலா வலயத்தின் தற்போதைய பிரச்சினைகள் மாஓயா ஊடாக புதிய கேபிள் கார் திட்டத்தை நிர்மாணிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, பின்னவல மிருகக்காட்சிசாலையின் பணிப்பாளர், வன திணைக்கள அதிகாரிகள் மற்றும் சுற்றுலாத்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞன் கைது

கெலும் குணதிலக்க

எதிமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடியாகல, வத்தேகம, கெகலான, வராபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயது பாடசாலை மாணவியை கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதி சட்டக்காவலில் இருந்து கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் காதலெனக் கருதப்படும் 21 வயதுடைய இளைஞரொருவர் அம்பாறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், தனது காதலியை அம்பாறை, லாதுகல பிரதேசத்திலும் அவரின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப் பாட்டுக்கமைய சிறுமியை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தியதன் பின்னர் சட்டப் பாதுகாப்பில் வைக் கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் மீண்டும் தனது காதலனுடன் அவரின் வீட்டுக்குச் சென்றுள்ளதுடன், அதன்போது உடலுறவிலும் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அதன்போது இருவரும் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சியம்பலாண்டுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரான இளைஞரை சியம்பலாண்டுவ நீதிவான்ற நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அம்பாறை மற்றும் எதிமலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மீலாத் தின சிறப்பு நிகழ்வு ஹேந்தெனிய ஜும்ஆ பள்ளிவாசலில்

எம்.எம்.எம்.ரம்ஸீன்

பேராதனை ஹேந்தெனிய ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மீலாத் தின விழா மற்றும் பாராட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஹேந்தெனிய ஜும்ஆ பள்ளிவாசல் மேல் மாடியில் நடைபெறும் இவ்விழாவில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். இதில் மாணவர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதுடன் அல்-சபா ஜனாஸா நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அகில இலங்கை தமிழ் மொழித்தின

# தென் மாகாண போட்டிகள் இன்று வெலிகம அறபாவில்

அகில இலங்கை தமிழ் மொழித் தின தென் மாகாண போட்டிகள் இன்று (27) புதன்கிழமை வெலிகம அறபா தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளன.

தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.மஷாஹிர் (நளீமி) தலைமையில் இடம்பெறும் இப்போட்டிகளின் அங்குரார்ப்பண வைபவம், தென் மாகாண கல்விப் பணிப்பாளர் சன்ன உபாலி வீரசேகர மற்றும் பிரதி கல்விப் பணிப்பாளர் அசேனி பரன விதாரன ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளது.

காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்தும் 50 பாடசாலைகளைச் சேர்ந்த 360 போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். எழுத்தாக்கப் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ள நிலையில், ஏனைய போட்டிகளான வாசிப்பு, பேச்சு, பாவோதல், நாட்டார் பாடல், நாடகம், இசை (தனி), இசை (குழு), நடனம் (தனி), நடனம் ( குழு) தமிழ் அறிவு வினா விடை, முஸ்லிம் நிகழ்ச்சி, விவாதம் போன்றன இடம் பெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான நடுவர்களாக கொட்டகல கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். தமிழ் மொழித் தின போட்டிகளின் இறுதி நிகழ்வான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்றைய தினம் பிற்பகல் 4.00 மணியளவில் இடம் பெறவுள்ளது.

வெற்றியீட்டும் போட்டியாளர்கள் தேசியமட்டப் போட்டிகளுக்கு தகுதிபெறவுள்ளதாக தமிழ் மொழித் தின போட்டிகளின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம். எம்.முந்திர் (நளீமி) தெரிவித்தார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (26.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.9639 | 213.7160 |
| கனேடியன் டொலர் | 235.2171 | 246.2671 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8088 | 45.7436 |
| யூரோ | 335.7917 | 350.9559 |
| ஜப்பான் யென் | 2.1342 | 2.2266 |
| சிங்கப்பூர் டொலர் | 231.7947 | 242.5716 |
| ஸ்ரேலிங் பவுன் | 387.9182 | 403.9233 |
| சுவிஸ் பிரான்ங் | 346.7513 | 364.0019 |
| ஐ.அ. டொலர் | 318.7387 | 329.8014 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 861.9222 |
| குவைட் | குவைட் தினார் | 1,049.9415 |
| ஓமான் | ஓமான் றியால் | 843.1495 |
| கட்டார் | கட்டார் றியால் | 89.0242 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.5369 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.3746 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.09.25
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5248
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,192,640.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 0 5 0 4 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3490
சீட்டிழுப்பு திகதி 2023.09.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 62,227,848.40
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 18 38 42 48
விசேட எழுத்து N
இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 20515

லக்கி 7 Lucky
திகதி 25.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0074
வெற்றி இலக்கினம் கன்னி
L7 இலக்கம் 0 4
வெற்றி இலக்கங்கள் 1 5 2 1 6 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,094,348.16

தன நிதானய
தேதி 2023/09/25
சீட்டிழுப்பு இலக்கம் 1278
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,131,977.60
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 28 58 64 71
விஷேசட ஆங்கில எழுத்து W
Double Chance இலக்கம் 02870

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 557
சீட்டிழுப்பு திகதி 2023-09-25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 08 17 50 62
விசேட இலக்கினம் விருச்சிகம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1596
25/09/2023
30449
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,861,580.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 12 15 37 50
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# மரக்கறி உற்பத்தியாளர்கள் பாதிப்புறும்போது அரசாங்கம் ஏறெடுத்தும் கண்டுகொள்ளாதது ஏன்?

## முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் இராஜாராம் கேள்வி

மஸ்கெலியா நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் தேயிலைத்தொழில், மரக்கறி உற்பத்தித் தொழில் மற்றும் சுற்றுலாத் தொழிலை பிரதான தொழில்களாக மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் தீர்த்து வைக்கின்றன. அதேவேளை, சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் பொழுதும் அரசாங்கமே அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்கின்றது. ஆனால், மரக்கறி உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படும்பொழுது எந்த அரசாங்கமோ சம்பந்தப்பட்ட விவசாய அமைச்சோ அதனை ஏறெடுத்தும் கண்டுகொள்வதில்லை. அது ஏன்?

ஆகையால், மரக்கறி உற்பத்தியில் பாதிக்கப்படும் விவசாயிகளை பாதுகாக்க விவசாய சங்கம் ஒன்றை உருவாக்க அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,



அரசாங்கத்திடம் சரியான விவசாயக் கொள்கை இல்லை. விவசாயத் திணைக்களத்தில் சரியான தரவுகள் இல்லை. உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளுக்கேற்ப உற்பத்தியாளர்களுக்கு சரியான விலை கிடைப்பதில்லை. இதனால் மரக்கறி உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை ஒரு கிலோ 50 ரூபாவுக்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து அதே மரக்கறியை கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களில் 150 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு உரியவிலை கிடைப்பதில்லை. பாவனையாளர்களும் அதிக விலை கொடுத்து வாங்குவதால் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் இடைத் தரகர்களே இலாபம் அடைகின்றார்கள்.

மழைகாலத்தில் மரக்கறி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டால் அரசாங்கத்தால் எந்தவித நிவாரணமும் கிடைப்பதில்லை. அதேவேளை, எந்தக் காலத்தில் என்ன பயிரிடுவது என்பதைப் பற்றி ஒரு விளக்கம் இல்லை. உதாரணத்துக்கு நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் தற்பொழுது லீக்ஸ் எல்லா இடங்களிலும் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படுகின்றது. எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் லீக்ஸ் பயிரிடப்பட்டதால் விளைச்சலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. லீக்ஸ்ஸின் விலையும் குறைந்துள்ளது. இதே நிலைமைதான் சகல மரக்கறிகளுக்கும் ஏற்படுகின்றது.

எனவே, மரக்கறிகளுக்கு ஒரு நிர்ணய விலையைக் கொண்டு வருவதற்கும் விவசாயத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் ஓர் அதிகார சக்தியுள்ள விவசாயச் சங்கம் உருவாக்கப்பட வேண்டும் - என அவர் கூறினார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பொகவந்தலாவை சென்மேரிஸ் கல்லூரியின் மாணவி வசந்தகுமார் நிதர்சனா நாவலப்பிட்டி நகரிலிருந்து பொகவந்தலாவ நகருக்கு 54 கிலோமீற்றர் தூரத்தை வெறும் 8 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களிலும் நடந்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தார்.

இந்நிலையில், அவரின் திறமையைப் பாராட்டி அவரின் கல்விச் செலவுக்காக ஊக்கத்தொகையை மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணனின் வேண்டுகோளுக்கமைய ஊக்கத்தொகை வழங்கிவைக்கப்பட்டது.



அனைத்து தபால் ஊழியர்களுக்கும் மாதாந்தம் 20ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினர் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். அதில் ஒன்று நேற்று முன்தினம் (25) நுவரெலியா தபால் நிலையத்துக்கு முன்பாக இடம் பெற்றது. (கண்டி நிருபர்)

# தொடர்மாடிக் குடியிருப்பில் தீப்பரவல்





பசறை 7ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள யூரி தோட்டத்தின் மாப்பகல பிரிவிலுள்ள 5ஆம் இலக்க தொடர் லயன் குடியிருப்பில் நேற்று முன்தினம் (25) மாலை ஏற்பட்ட தீப்பரவலால் தொடர் லயன் குடியிருப்பின் அனைத்து வீடுகளும் தீயில் எரிந்து நாசமாகின.

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் ஆலோசனையின்பேரில், மேற்படி தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 09 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேரை சந்தித்த ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஆனந்தராஜா பாபு நிலைமைகளை ஆராய்ந்ததுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர மற்றும் அவசியத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தோட்ட முகாமைத்துவம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி ஏற்பாடுகளை மேற்கொண்டதாக முன்னணியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



கம்பளை நகரில் புதிய சிறைச்சாலை ஒன்றை அமைக்க நீதி, அரசியலமைப்பு சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அடிக்கல்லை நாட்டிவைத்தார். இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, இராஜாங்க அமைச்சர் அனுராதா ஜயரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (கண்டி நிருபர்)

# லொறி பள்ளத்தில் வீழ்ந்து மூவர் காயம்



கண்டி நிருபர்

நானுஓயா, கிரிமிட்டி சந்தியில் சிறிய ரக லொறியொன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து நேற்று முன்தினம் (25) விபத்துக்குள்ளாகியதில் மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மொரயாவில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணிக்கும் போதே குறித்த லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சுமார் 60அடி ஆழமான பள்ளத்துக்குள் விழுந்துள்ளது எனத் தெரிவித்த நானுஓயா பொலிஸார், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# அதிபர் உட்பட ஆசிரியர்கள் நால்வரை உடனடியாக இடமாற்றம் செய்க!

## பொகவந்தலாவையில் ஆர்ப்பாட்டம்



கண்டி நிருபர்

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் - 2 தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் உட்பட ஆசிரியர்கள் 04 பேரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறுகோரி நேற்றுமுன்தினம் (25) பெற்றோர்களால் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலையின் ஒழுக்கத்தை சீரழித்த அதிபர் மற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் எனக்கோரி அவர்கள் பதாகைகளை ஏந்தியிருந்தனர். சம்பவ இடத்துக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.சிவகுமார் விஜயம் மேற்கொண்டு பெற்றோர்களது வேண்டுகோளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக் காரர்கள் அமைதியாக கலைந்து சென்றனர்.

# நிலநடுக்கம்

ராமு தனராஜா

மொனராகலை மாவட்டத்துக்குட்பட்ட புத்தல மற்றும் அதனைச் சூழவுள்ள சில பகுதிகளில் சிறு அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 11.20 மணியளவில் 2.4. ரிச்டர் அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது என்று புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. அதேவேளை, நான்கு இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கருவிகளில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நில நடுக்கத்தால் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தியாக தீபம் திலீபனுக்கு நினைவேந்தல்

## இரணைமடுவில் அஞ்சலி





மு.தமிழ்ச்செல்வன்

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இரணைமடு சந்தியில் அமைக்கப்பட்ட நினைவேந்தல் மண்டபத்தில் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.

தாயக செயலணியின் பங்களிப்புடன் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் (25) காலை 9.30 மணிக்கு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பிரதி தலைவர் ப.குமாரசிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது.

பொதுச்சுடரை சின்மயா மிசன் சுவாமிகள் ஏற்றி வைக்க தொடர்ந்து ஈகைச்சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டன. மலர்மாலையை தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ச.கீதன் அணிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் காக்கா அண்ணா மலர்தூவி அஞ்சலிக்க தொடர்ந்து மலரஞ்சலிகள், நினைவுரைகள் என்பன இடம்பெற்றன.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டனர்.

## மன்னாரில் அஞ்சலி





மன்னார் நகர் நிருபர்)

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தமிழர் தாயகப் பகுதிகள் மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், மன்னாரில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) காலை நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தேசிய உணர்வாளர்கள், நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் இணைந்து மலரஞ்சலி செலுத்தினர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பரஞ்சோதி, மன்னார் நகர சபையின் முன்னாள் உப தவிசாளர் ஜான்சன் உட்பட பொதுமக்கள் பலர் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டு தியாக தீபம் திலீபனுக்கு சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

## வவுனியாவில் அஞ்சலி





வவுனியா நிருபர்

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா தோணிக்கல்லில் இடம்பெற்றது.

குறித்த அஞ்சலி நிகழ்வானது போராளிகள் நலன்புரி சங்க அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது தியாகதீபம் திலீபனின் உருவப்படத்துக்கு இரு மாவீரரின் தாயான உருத்திரானந்தம் யோகமணியால் முதல் சுடரேற்றி வைக்கப்பட்டிருந்ததுடன், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

போராளிகள் நலன்புரி சங்கத் தலைவர் எஸ். அரவிந்தனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கோணாவில் இளைஞரின் சடலம்: கொலையென சந்தேகம்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, கோணாவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரின் சடலம் ஊற்றுப்புலம் கிராமத்தின் நாற்சந்தியில் காணப்பட்டுள்ளது.

அந்த இளைஞனின் சடலம் நேற்று முன்தினம் (25) இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் குறித்த சந்தியில் பொதுமக்களால் அவதானிக்கப்பட்டு உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கிளிநொச்சி, கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த முப்பது வயது மதிக்கத்தக்க புஸ்பராசா தினேஸ்கரன் என்பவரே கொல்லப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# விவசாயிகளுக்கான எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் பூநகரியில்

சாவகச்சேரி நிருபர்



பூநகரி பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கான எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (25) பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் சுகாதார வைத்திய அதிகாரி துஷ்யந்தன், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றெனால்ட் ஆகியோர் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுகளை வழங்கினர்.

இது தொடர்பாக விவசாயிகளுக்கு சுகாதார அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது பருவகாலப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கவுள்ளதால் தொற்றுடைய எலிகளின் சிறுநீருடன் கலந்து வயல் வேலையில் வெற்றுக்கால்களுடன் ஈடுபடும்போது எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம். இந்நோய்க்கான சிகிச்சைகளை உரிய நேரத்தில் பெறாதுவிடின் அங்க செயலிழப்புகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் நிகழலாம். எனவே, வயலில் எலிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை முன்னெடுத்து நோயிலிருந்து தப்பிக்க வேண்டும்.

எலிகளை வேட்டையாடும் பறவைகள், ஊர்வனவற்றின் வரவை அதிகரிக்கும் வழிகளைக் கையாளுதல், வரப்பை அண்டிய புற்றுகளை அகற்றுதல், முழங்கால் வரை மூடிய நீர் கசியாத காலணிகள் மற்றும் கையுறைகளை அணிதல், நோய் பரவுகின்ற பகுதியிலுள்ளோர் முற்பாதுகாப்புக்கான மருந்துகளை உரிய வைத்திய ஆலோசனையுடன் பெற்று பாதுகாப்பாகவும் இருக்க முடியும்.

எனவே விவசாயிகள் இந்நோய்ப்பற்றி விழிப்பாக இருக்கவேண்டியது மிக அவசியமாகும் - என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

பெயாமெட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு தங்கள் சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாக். அணிக்கு இந்திய விசா கிடைத்தது



உலகக்கிண்ண தொடரில் பங்கேற்கவுள்ள பாகிஸ்தான் அணிக்கு விசா கிடைத்திருக்கிறது. உலகக்கிண்ண தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் அணிக்கு விசா வழங்குவதில் இழுபறி நீடித்தது. இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகம் விசா வழங்குவதில் கால தாமதம் செய்வதாகவும் இது உலகக்கிண்ண போட்டிக்கு தங்கள் அணி தயாராவதில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, ஐ.சி.சி யிடம் புகார் செய்தது.

இந்நிலையில், விசா பிரச்சினை நேற்று முன்தினம் தீர்ந்தது. ஆனால் இந்தியாவுக்கு புறப்படுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்னதாகத்தான் அவர்களுக்கு விசா கிடைத்தது. பாகிஸ்தான் அணி இன்று அதிகாலை டுபாய் வழியாக ஹைதராபாத் செல்கிறது.

# உலகக்கிண்ண தொடருக்கான இலங்கை குழாம் வெளியானது



ஏ. அகீல் சிஹாப்

இந்தியாவில் எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடருக்கான 15 பேர் கொண்ட இலங்கை குழாம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தசுன் ஷானக தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள 15 பேர் கொண்ட குழாத்தில் உடல் தகுதி அடிப்படையில் உபாதைக்குள்ளான வனிந்து, மஹீஷ், மதுசங்க ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுடன், குசல் மெண்டிஸ் (உப தலைவர்), பெதும் நிஸ்ஸங்க, குசல் பெரேரா, திமுத் கருணாரத்ன, சரித் அசலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம, துனித் வெல்லாலகே, கசுன் ராஜித, மதீஷ பத்திரன, லஹிரு குமார் ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளனர். மேலும் மேலதிக வீரர்களாக சாமிக்க கருணாரத்ன மற்றும் துஷான் ஹேமந்த ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# ஆடவர் எலைட் பிரிவில் ஹெட்டியாராச்சி சம்பியன்




நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் நெஸ்டமோல்ட் சைக்கிளிங் செலஞ்ச் 2023 சைக்கிளோட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் நடைபெற்றது.

இதில் 650க்கு மேற்பட்ட சைக்கிள் ஓட்ட வீரர்கள் பங்குபெற்ற தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற குறித்த சைக்கிள் ஓட்டத்தில் 48 கிலோ மீற்றர் தூரத்தை கொண்ட ஆடவருக்கான எலைட் பிரிவில் பரகொன் பெட்லர்ஸ் சைக்கிளிங் கழகத்தை சேர்ந்த ஏ. ஹெட்டியாராச்சி 1 மணித்தியாலம், 8 நிமிடம், 45 செக்கன்களில் பந்தைய தூரத்தை எட்டி முதலிடத்தை கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.

இரண்டாவது இடத்தை இலங்கை ஆர்மி சைக்கிளிங் கழகத்தைச் சேர்ந்த எச்.எம்.டபிள்யூ சந்ருவான் பின்டோ பெற்றுக்கொண்டதுடன், மூன்றாம் இடத்தை இலங்கை கடற்கடை சைக்கிளிங் கழகத்தைச் சேர்ந்த ஜானக்க ஹேமந்த பெற்றுக் கொண்டார்.

பரிசளிப்பு நிகழ்வில் நெஸ்லே நிறுவனத்தின் பிரதி தலைவர் பந்துல கொடகே, நெஸ்லே நிறுவனத்தின் விற்பனை பணிப்பாளர் ஜெகத் வெடகே, நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பெர்னாட் ஸ்டீபன், இலங்கை சைக்கிளிங் கூட்டமைப்பின் தலைவர் அமல் ஹர்ஷன டி சில்வா, விளையாட்டு அமைச்சின் மேலதிக பணிப்பாளர் ரோஹண டி சில்வா, இலங்கை சைக்கிளிங் கூட்டமைப்பின் செயலாளர் நளின் அதிகாராச்சி, டேரி நெஸ்லே நிறுவனத்தின் பணிப்பாளர் ருவாண் வெலிகல ஆகியோர் கலந்து கொண்டனர்.







## விளையாட்டுத் துளிகள்

சீனாவின் ஹாங்சுவில் நடைபெற்றுவரும் 19ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கையின் நட்சத்திர நீச்சல் வீரர் அகலங்க பீரிஸ் ஆண்களுக்கான 50 மீற்றர் பின்நோக்கிய நீச்சல் (பேக்ஸ்ட்ரோக்) 2ஆவது தகுதிகாண் போட்டியில் 26.01 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து தனது சொந்த இலங்கை சாதனையை முறியடித்து அசத்தினார். முன்னதாக கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய மற்றும் தேசிய கனிஷ்ட நீச்சல் போட்டித் தொடரில் 26.12 செக்கன்களில் இலங்கை சாதனையை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

..........................

கரீபியின் ப்ரீமியர் லீக் தொடரில் கயானா அமேசான் வாரியர்ஸ் அணியின் கேப்டனான இம்ரான் தாஹிர் தன் அணியை சம்பியனாக்கி டோனியின் சாதனையை உடைத்தார். அதாவது 44 வயதில் இம்ரான் தாஹிர் டி20 லீக் சம்பியன்ஷிப்பைக் கைப்பற்றினார். சி.எஸ்.கே கடந்த ஐ.பி.எல் தொடரின் சம்பியனானபோது டோனியின் வயது 41. ஆகவே அவரை விட 3 வயது மூத்தவரான இம்ரான் தாஹிர் ரி20 கோப்பையைக் கைப்பற்றி அதிக வயதில் கோப்பையை வென்று டோனியின் சாதனையை முறியடித்துள்ளார்.

..........................

பிரான்ஸில் நடைபெற்றுவரும் றக்பி உலகக்கிண்ண தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற வேல்ஸ் - ஆஸி. அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் வேல்ஸ் அணி 40-06 என்ற புள்ளிகள் கணக்கில் அபார வெற்றியீட்டியது. அதன்படி மூன்று ஆட்டங்களிலும் வெற்றியீட்டிய வேல்ஸ் புள்ளிப்பட்டியலில் முதலிடத்திலுள்ளதுடன் காலிறுதி வாய்ப்பையும் பெருமளவில் உறுதி செய்துள்ளது.

## எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கமானது, பழைய மாணவர்களை கல்லூரியுடன் இணைக்கவும் அவர்களின் மூலம் பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் எதிர்வரும் 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் தெல்தோட்டை மெதகெகில, ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

எனசல்கொல்ல பிறீமியர் லீக் - 2023 என்ற பெயரில் இடம்பெறும் இப்போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வு எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## கம்பளை முஸ்லிம் வித்தியாலயத்துக்கு ஜூடோ போட்டியில் தங்கப்பதக்கம்

கண்டி நிருபர்

இலங்கை பாடசாலைகள் ஜூடோ சங்கத்தினால் நடத்தப்பட்ட போட்டியில் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஜூடோ சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் கம்பளை முஸ்லிம் வித்தியாலய மாணவன் எம்.இஸட் அரபாத் தங்கப்பதக்கத்தினை வென்றார்.

திருகோணமலையில் இடம்பெற்ற போட்டியில் பங்குகொண்ட அவர் தங்கப்பதக்கத்தினை வென்று சம்பியனாகத் தெரிவானார். இவர் கம்பளையைச் சேர்ந்த எம்.எச்.எம்.ஸியாத் - சபீகா தம்பதிகளின் புதல்வராவார்.



## பெண்ணொருவரை கடத்தி கப்பம் கோரிய இருவர் கைது

ரஸீன் ரஸ்மின்

மாரவில பிரதேசத்தில் பெண்ணொருவரை கடத்திச் சென்று கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் மாரவில பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவர்களிடமிருந்து 9 மில்லிமீற்றர் வகை துப்பாக்கியொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கட்டுனேரிய - லான்சிகம பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 24ஆம் திகதி சிலரால் கடத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணின் கணவர், தனது மனைவியை சிலர் கடத்திச் சென்றுள்ளதாகவும் அவரை விடுவிக்க பணம் வழங்க வேண்டும் என கடத்தல்காரர்கள் தன்னிடம் கப்பம் கோரி வருவதாகவும் மாரவில பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டுக்கமைய, மாரவில பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து கடத்தப்பட்ட பெண் கொச்சிக்கடை - தலுவாகொடுவ பகுதியில் உள்ள வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்டுள்ளார்.

அத்துடன், குறித்த பெண்ணைக் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நேற்று முன்தினம் (25) மாரவில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடத்தப்பட்ட குறித்த பெண், இத்தாலியில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, 08 பேரிடம் தலா 10 இலட்சம் ரூபா வீதம் பணம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இதுவே அந்தப் பெண் கடத்தப்பட்டமைக்கான காரணமாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச்செ சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை கடற்கொள்ளையர்கள் நாகை மீனவர்கள் மீது தாக்குதல்



திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது

இலங்கை கடற்கொள்ளையர்கள் மீண்டும் கத்தி முனையில் நாகை மீனவர்களின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி அடுத்துள்ள செருதூர் மீனவ கிராமத்தில் இருந்து கோவிந்தசாமி மகன் சக்திபாலன் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 24ஆம் திகதி காலை 7 மணியளவில் கடலுக்கு மீன்பிடிக்க ஹரி கிருஷ்ணன், சூர்யா, கண்ணன், சிரஞ்சீவி, சக்தி பாலன் உள்ளிட்ட 05 மீனவர்கள் சென்றுள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி அருகே செருதூர் மீனவ கிராமத்தைச் சேர்ந்தவர் சக்திபாலு. இவரது பைபர் படகில் 05 மீனவர்கள் செருதூர் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து திங்கட்கிழமை இரவு மீன்பிடிக்கச் சென்றனர். செவ்வாய்க்கிழமை அதிகாலை கோடியக்கரை அருகே மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது இரு படகுகளில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் 08 பேர், மீனவர்களின் படகைச் சுற்றி வளைத்தனர். தொடர்ந்து அந்த படகில் ஏறிய இலங்கை கடற்கொள்ளையர்கள், மீனவர்களின் கழுத்தில் கத்தியை வைத்து, அவர்கள் பிடித்து வைத்திருந்த ரூ.1இலட்சம் மதிப்புள்ள மீன்களையும் 550 கிலோ மீன்பிடி வலை, வாக்கி – டாக்கி, ஒரு ஜிபிஎஸ் கருவி ஆகியவற்றை பறித்து கொண்டு தப்பினர்.

இதனிடையே மீன்களை தர மறுத்த மீனவர்கள் ஐவர் மீது இரும்பு பைப்களை கொண்டு தாக்குதல் நடத்தினர். இதில் காயமடைந்த மீனவர்கள் செருதூர் வந்து, பஞ்சாயத்தார்களிடம் தகவல் தெரிவித்தனர். பின்னர் நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் 108 அம்பியூலன்ஸ் மூலம் நாகை அரசு வைத்தியக் கல்லூரி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து கீழையூர் பொலிஸார் வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர். தொடர்ச்சியாக ஒரே கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு அடுத்தடுத்து தாக்குதல் நடைபெற்று வருவது மீனவ கிராமங்கள் மத்தியில் ஒரு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் மட்டுமல்லாமல் தமிழகத்தில் கடலோரப் பகுதியில் வசிக்கக்கூடிய மீனவர்கள் மீது தொடர்ச்சியாக இலங்கை கடற்கொள்ளையர்கள் அடாவடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை கடற் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் மீனவர்களுக்கு தமிழக அரசு உரிய இழப்பீடு மற்றும் நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் சுதந்திரமாக இந்திய எல்லைக்குள் மீன்பிடிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரான்ஸ் தூதுவர் ஜீன் யாழ்.பல்கலைக்கு விஜயம்



இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ப்ராங்கோஸிஸ் பக்றெற் தலைமையிலான குழு ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பிரான்ஜ் தூதுவர் தலைமை யிலான குழுவினர், நேற்று (26) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற், கலாசார ஒத்துழைப்புக்கான துணைத் தூதுவர் ஒலிவியா பெலீமியர் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தின் ஊடகத் தொடர்பாடல் அதிகாரி டினுசா இல்லப்பெருமா ஆகியோர் அடங்கிய குழுவினரே நேற்றுக் காலை யாழ்ப்பாண பல்கலைக்கு விஜயம் செய்தனர்.

பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த பிரான்ஸ் தூதுவர் தலைமையிலான குழுவினரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

சமகால விடயங்கள் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தினூடாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முன்னெடுக் கப்படும் கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயற்திட்டங்களின் மீளாய்வு குறித்து இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.




***கொழும்பு-15 ஹம்சா கல்லூரியின் 1987ஆவது வருட மாணவர் தொகுதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர்கள் கௌரவிப்பு மற்றும் சாதனை மாணவர்களுக்கான பாராட்டு விழா லத்தீப் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக ஹிஸ்வி சாலிஹ், பாரியார் றிஸ்வி சாலியா, எம்.டி.எம்.தௌபீக் மற்றும் உதவிச்செயலாளர் இஹ்சான் ஆகியோர் கலந்துகொண்டனர்.***



# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் புலனாய்வு அதிகாரிகளுக்கும் தொடர்பாம்

## நீதியான விசாரணை இடம்பெறுமா என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது என்கிறார் சாணக்கியன்





களுதாவளை, வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்கள்

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கும் தொடர்பிருப்பதாக சனல் - 4 காணொளியில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், அரசாங்கம் எவ்வாறு நீதியான விசாரணையை முன்னெடுக்கும் என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளதாகத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், உண்மைத்தன்மையை அறிவதற்கு சர்வதேச விசாரணையொன்று அவசியமாகும் என்றும் கூறினார்.

சித்தாண்டியில் பண்ணையாளர்கள் மேற்கொண்டுவரும் சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் நேற்றுமுன்தினம் அப்போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், யுத்த சூழல்நிலையின்போதும் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பும் எமது மக்கள் இலட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன் கடத்தி காணாமலாக்கப்பட்டனர்.அத்துடன் பல அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். யுத்தம் மௌனிக்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்தநிலையில் எங்களுடைய மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

சித்தாண்டி கிராமத்திலிருந்து பலர் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது உறவுகள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இவற்றுக்கு நீதி கிடைக்க சர்வதேச விசாரணை அவசியம் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கும் தொடர்பிருப்பதாக சனல் - 4 காணொளியில் கூறப்பட்டுள்ளது. அது மாத்திரமின்றி, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதியின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், அரசாங்கமே தங்களை விசாரணை செய்யுமா என்ற கேள்வி மக்கள் மனதில் எழுந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற பின்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நான் நேரில் சென்று பார்வையிட்டேன். பிஞ்சுக் குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள் என பலர் இறந்திருந்தார்கள். இன்றும் பலர் காயமடைந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் ரவீந்திரநாத் உட்பட எண்மரின் கொலைக்கு காரணமானவர்கள் பொலன்னறுவை தீவுச் சேனைப் பகுதியிலிருந்து இயங்கியவர்கள் என ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் பேச்சாளர் அசாத் மௌலான கூறியுள்ளார். "இதிலே கட்டளையிட்டவர்கள் பாதுகாப்புத் தரப்பினர் என்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதி இதனைத் செயற்படுத்தியவர் எனவும் அவர் கூறியுள்ளார். அதன் உண்மைத்தன்மையை அறிவதற்கு சர்வதேச விசாரணையொன்று அவசியமாகும் என்றார்.

# தாழங்குடா நரசிங்க காளியம்மன் ஆலய உற்சவம்!

கல்லடி செய்தியாளர்

திருக்கதவு திறத்தலுடன் நேற்று (26) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிய மட்டக்களப்பு, தாழங்குடா அருள்மிகு நரசிங்க காளியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள தீமிதிப்புடன் நிறைவுபெறவுள்ளது.

இதன்போது வியாழக்கிழமை (28) அம்மனுக்கு விஷேட பூசைகள் நிகழ்த்தப்பட்டு, அம்மன் வீதியூலா வந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பார்.



இவ்வாலய உற்சவக் கிரியைகள் யாவும் ஆலய பிரதம பூசகர்களான செ.விமலேஸ்வரன், சி.அன்புராசா மற்றும் உதவிப் பூசகர்களான செ.நகுலேஸ்வரன், சக்தி ஸ்ரீ குருகுல மாணவர்களால் நிகழ்த்தப்படவுள்ளன.

# சாய்ந்தமருது அல்-ஹிலாலில் சித்திர, உணவுக் கண்காட்சி







பொலிவேரியன் செய்தியாளர்

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் சித்திர, கைப்பணி மற்றும் உணவுக் கண்காட்சி நேற்று முன்தினம் (25) இடம்பெற்றது.

அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ. ஜிஹானா ஆலிப் நாடாவை வெட்டி கண்காட்சிக் கூடத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம். மலீக், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் பொறியியலாளர் எம். சீ. கமால் நிசாத், கல்முனை ஸாஹிராக் கல்லூரி முன்னாள் அதிபர் ஐ.எல். ஹம்ஸா, அல்-ஹிலால் வித்தியாலய பிரதி அதிபர்களான நுஸ்ரத் பேகம், ஏ.பி. ஷெறோன் டில்ராஸ், பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் எம்.ஐ. சர்ஜுன், அல்-ஹிலால் வித்தியாலய முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியின்போது பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி வரையப்பட்ட சித்திரங்கள் மாணவர்களின் கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# நூலகங்களுக்கு புத்தகங்கள் அன்பளிப்பு





சாய்ந்தமருது செய்தியாளர்

SERLIN நூலக உறுப்பினர்கள் மற்றும் நூலகர்களுக்கு Empowering Libraries with the Power of Research எனும் கருப்பொருளில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விஷேட பயிற்சிப் பட்டறை பல்கலைக்கழக நூலகத்தின் பிரதான கருத்தரங்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நூலகர் எம்.எம்.றிபாயுடீன் தலைமையில் இம்பெற்ற இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகப் பங்கேற்றிருந்தார்.

இந்நிகழ்வில் இந்திய பாரதிதாசன் பல்கலைக்கழக நூலக மற்றும் தகவல் அறிவியல் துறைப் பேராசிரியர் டாக்டர் பாலசுப்ரமணி ராஜன் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் ஆர்.மகேஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு விரிவுரையாற்றியதுடன் பயிற்சிகளையும் வழங்கினர்.

இதன்போது TM Trust Australia அமைப்பினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பெறுமதியான புத்தகங்கள் SERLIN அமைப்பின் அங்கத்துவ நூலகங்களான கல்முனை மற்றும் மருதமுனை பொது நூலகங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இவற்றை நூலகர்களான ஏ.எல்.எம். முஸ்தாக், எம்.ஏ.சி. ஹரீஸா ஆகியோரிடம் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் கையளித்தார்.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் டபிள்யூ.ஜே.ஜெயராஜ், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.சி.எம்.அஸ்வர், கலாநிதி எம்.எம்.மஷ்ரூபா, ஏ.எம்.நபீஸ், எஸ்.எல்.எம்.சஜீர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மருந்தாளர் ரகுமான் அரச சேவையிலிருந்து ஓய்வு



பொத்துவில்,அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்கள்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள பிராந்திய மருந்து விநியோகப் பிரிவின் பொறுப்பதிகாரியாக சுமார் 17 வருடங்கள் கடமையாற்றிய மருந்தாளர் ஐ.எல்.அப்துல் ரகுமான் தனது 36 வருட கால அரச சேவை சுகாதாரப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மருந்தாளர் ரகுமானுடைய மகத்தான பணியைப் பாராட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவைநலன் பாராட்டு விழா திங்கட்கிழமை (25) பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய மருந்தாளர் தர்ஷினி இந்திரகுமார் ஆகியோர் மருந்தாளர் ரகுமானின் கடந்தகால சேவைகளை நினைவுகூர்ந்து உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் மருந்தாளர் ரகுமானின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

குறித்த நிகழ்வின் போது பிரதேச வைத்திய அதிகாரிகள் சிலரும் பிரிவுகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு பரிசில்களையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது

# தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராக முஸ்தபா



மாளிகைக்காடு செய்தியாளர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் நடப்பு ஆண்டுக்கான புதிய தலைவராக பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற நிகழ்விலேயே இத்தெரிவு இடம்பெற்றது.

புதிய தலைவருக்கான போட்டியில் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கணிசமான வாக்குகளைப் பெற்று பேராசிரியர் முஸ்தபா அச்சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக முதற்றொகுதி மாணவர்களுள் ஒருவராகிய பேராசிரியர் முஸ்தபா கடந்த காலங்களிலும் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர். இதன்போது ஆசிரியர்களின் நலன்களை வெற்றிகொள்வதில் பேராசிரியர் முஸ்தபா குறிப்பிடும்படியான பங்களிப்புகளை நல்கியிருந்தார். தென்கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ துறையின் தலைவராகிய பேராசிரியர் முஸ்தபா மீண்டும் அத்தகைய பொறுப்புமிக்க பதவிக்கு அமர்த்தப்பட்டிருப்பது ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

# குளக்கோட்டன் மண்டபத்தில் தியாகி திலீபனின் நினைவேந்தல்





அப்துல்சலாம் யாசீம்

தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை -குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்று (26) இடம்பெற்றது.

தமிழ் மக்கள் அமைப்பு நடத்திய இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில், திருகோணமலை குளக்கோட்டன் கேட்போர் கூடத்தில் நேற்று நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த திலீபனின் நினைவு தின நிகழ்வுக்கு தடை உத்தரவு கோரி திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.ஜே.எஸ்.ரணவீர, திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த பிரதம நீதவான் பயாஸ் ரஸ்ஸாக் திலீபனின் நினைவு நாள் அனுஷ்டிப்பதற்கு தடை உத்தரவு பிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தியாக தீபம் திலீபனுக்கு மட்டக்களப்பில் அஞ்சலி







கனகராசா சரவணன்

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றது. இதன்போது தியாகதீபம் திலீபனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வடகிழக்கு முன்னேற்றக் கழகம், மட்டக்களப்பு வலிந்து காணாமல்போன உறவுகள் சங்கம் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், வடகிழக்கு முன்னேற்றக் கழகத் தலைவர் கு.வி.லவக்குமார், மட்டக்களப்பு மாநகர முன்னாள் முதல்வர் ரி.சரவணபவன், வண.பிதா ஜோசப் மேரி, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்றில் காணி உறுதி வழங்கும் நிகழ்வு





திராய்க்கேணி செய்தியாளர்

அக்கரைப்பற்றில் காணி உறுதிப்பத்திரமற்றவர்களுக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் யூ.எம்.முஹம்மத் அன்ஸார் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (26) நடைபெற்றது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் வை.ராஷித், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர், காணிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர், மீள்குடியேற்ற உத்தியோகத்தர் மற்றும் காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது காணி உறுதியற்ற 13 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

# நீரோடையில் உணவுக் கழிவுகள் கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மீரா நகர் செய்தியாளர்

மீராவோடை குளத்துக்கு அருகாமையிலுள்ள நீரோடைகளில் ஹோட்டல் கழிவுகள் வீசப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேட்டுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் இப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் மாநகர சபை மேலதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்கழிவுகள் இவ்விடத்தில் கொட்டப்படுவதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சுவாச நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



எனவே, இவ்விடத்தை மேற்குறித்த இரண்டு நிறுவன அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிட்டு சம்பந்தப்பட்டவர்களை இனங் கண்டு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# உரையாற்றிக்கொண்டிருந்த இல்ல முகாமையாளர் திடீர் உயிரிழப்பு

## சித்தாண்டியில் சம்பவம்





வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்கள்

மட்டக்களப்பு, சித்தாண்டி யோகசுவாமி சைவ மகளிர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் (25) மாலை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிக்கொண்டிருந்த இல்ல முகாமையாளர் திடீரென மயக்கமுற்ற நிலையில் மரணமடைந்தார்.

மாவடிவேம்பைச் சேர்ந்த சிவசம்பு பாக்கியராசா (63 வயது) என்பவரே திடீரென உயிரிழந்தவராவார்.புலம்பெயர் நாடொன்றில் வசிக்கும் நன்கொடையாளரால் மேற்படி இல்லத்துக்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி மூடைகள் வழங்கப்பட்டன.

இந்த அரிசி மூடைகள் கையளிக்கும் நிகழ்வில் உதவி புரிந்த நபருக்கு நன்றி கூறி உரையாற்றும்போது திடீரென மயக்கமுற்ற அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமடைந்தார்.சடலம் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.குறித்த முகாமையாளர் யோகசுவாமி சைவ மகளிர் இல்லத்தின் வளர்ச்சிக்காக நீண்டகாலமாக சேவையாற்றியிருந்தார்.அவரது உயிரிழப்பு பிரதேசத்தில் ஆழ்ந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



கிரான், தரவை மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு சித்தாண்டியில் இடம்பெற்றது.
படம்: வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

# போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு வீதி நாடகம்





மூதூர் செய்தியாளர்

போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு வீதி நாடகம் திருகோணமலை -தோப்பூர் சந்தை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றது.

போதைவஸ்து பாவனையால் ஏற்படும் விபரீதங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.இதன்போது போதை வஸ்துப் பாவனையால் ஏற்படும் தீங்குகள் குறித்து துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.



இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கெல்விட்டாஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



பிக்குமார் காணி பிடிக்கிறதும் அட்டகாசம் காட்டுறதும் பௌத்தர்கள் இல்லாத இடங்களில புத்தர் சிலைகள வைக்கிறதையும் பார்க்ககுள உண்மையில இந்த காவி ஆசாமிகள் புத்த பகவானின் போதனைகள படிச்சவங்க மாதிரி ஸ்ரீ லங்கா பிக்குகள இல்லையே....

எனக்கொரு டவுட்டு... ஒரு வேழ இந்த நாட்டில் வணங்கிற சிங்கள ஆக்கள் புத்தபகவானுக்கு பதிலாக யுத்தபகவானோ....? ஏனென்டா அனேகமான காவி தேரர்களின் நடத்த அப்படித்தான் இஞ்ச இருக்குது எலுவா..?

# வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழப்பு; வாகனச் சாரதி கைது!

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, சந்திவெளியில் கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாகவும் கனரக வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் சந்திவெளி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் வாழைச்சேனை, சுங்கான்கேணியைச் சேர்ந்த 22 வயதுடைய சண்முகதாஸ் அன்புதாஸ், கிரான் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய வடிவேல் தர்மராஜ் ஆகிய இருவருமே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

சந்திவெளி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது மோட்டார்சைக்கிளொன்றில் பயணித்த இருவரை பொலிஸார் நிறுத்துமாறு சைகை காட்டிய நிலையில் அவர்கள் நிறுத்தாது தப்பிச்சென்ற போது எதிரே வந்த கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கனரக வாகனச் சாரதியை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கோட்டக்கல்வி அதிகாரி சாஜித் கடமையேற்பு



மாளிகைக்காடு செய்தியாளர்

நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள யூ.எல்.எம்.சாஜித் நேற்று (26) நிந்தவூர் கோட்டக்கல்விப் பணிமனையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் முன்னிலையில் இவர் கடமைகளைப் பெறுப்பேற்றுக்கொண்டார்.

கல்முனை கல்வி வலய உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவரும் இவர், அப்பதவிக்கு மேலதிகமாகவே மேற்குறித்த பதவியைப் பொறுப்பேற்றுள்ளார் .

# மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டி ஒலுவில் ஹம்றாவுக்கு தங்கப் பதக்கம்



எஸ்.அஷ்ரப்கான்

மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் ஒலுவில் அல்-ஹம்றா வித்தியாலயத்தில் இருவர் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

கந்தளாயில் இடம்பெற்று முடிந்த பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.ஏ.ஆர்.ஹாபீஸ் ரைஹான் 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தையும் ஹிதாயத்துல்லாஹ் லுபினா ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்று தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை,16 வயதுப் பிரிவில் ஆர்.எவ்.சமா பரிதி வட்டம் எறிதல் போட்டியில் 04 ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நேற்றுமுன்தினம் (25) இடம்பெற்றது.

அதிபர் அஷ்ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி அதிபர் எம்.ஏ. கமறுன்நிஸா, உதவி அதிபர்களான எம்.எச்.எம்.நஸீம், ஏ.ஜே.எம்.றினீஸ், இவர்களைப் பயிற்றுவித்த பொறுப்பாசிரியர்களான ஏ.எம்.எம்.கியாஸ், ஆர்.நௌஷாத் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் சஹி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இஸ்லாமாபாத்தில் கைவிடப்பட்ட வீடுகளில் சமூக சீர்கேடுகள்

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை



அம்பாறை மாவட்ட செய்தியாளர்

சுனாமி அனர்த்தம் காரணமாக இஸ்லாமாபாத் பகுதிகளில் கைவிடப்பட்டுள்ள வீடுகளில் சமூகச் சீர்கேடுகள் இடம்பெற்றுவருவதாக அப்பகுதிவாழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, இஸ்லாமாபாத் பகுதிக்கு வெளியிடங்களில் இருந்து வரும் சிலர் இங்கு கைவிடப்பட்டுள்ள வீடுகளை போதைப்பொருள் பாவனை மற்றும் பாலியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான கைவிடப்பட்ட வீடுகள் உரிய பராமரிப்புகள் இன்றிக் காணப்படுவதால் அதனருகில் குடியேறி வாழும் மக்கள் கூட அச்சுறுத்தலினால் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

எனவே, மேற்குறித்த வீடுகளில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் முன்வர வேண்டும் எனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பில் தியாக தீபத்துக்கு அஞ்சலி!







கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு, கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்கள் ஏற்பாடு செய்து நடத்திய தியாகதீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று (26) செவ்வாய்க்கிழமை நிறுவக வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போது அன்னாரது உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் கற்கைகள் நிறுவக மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மரம் சரிந்ததில் கார் சேதம்



கே. ஏ. ஹமிட், நிந்தவூர், கோணாவத்தை செய்தியாளர்கள்

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதி ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அண்மித்ததாக காரொன்றின் மீது மரமொன்று சரிந்து வீழ்ந்துள்ளது. இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது காரில் பயணித்தவருக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தினால் குறித்த வீதியில் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குறிஞ்சாக்கேணி பாலத்தை நிர்மாணிக்க சவூதி அபிவிருத்தி நிதியம் நிதியுதவி

கந்தளாய் செய்தியாளர்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பாலம் அமைக்கும் வேலைகள் கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீகின் தொடர் முயற்சியினால் சவூதி அபிவிருத்தி நிதியம் பாலம் நிர்மாணிப்பதற்கான நிதியை வழங்குவதற்கான அனுமதியை உத்தியோகபூர்வமாக நிதியமைச்சுக்கு திங்கட்கிழமை (26) அறிவித்துள்ளது.

பால நிர்மாண வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## நடிகை வஹீதா ரஹ்மானுக்கு தாதா சாகேப் பால்கே விருது!



2023ஆம் ஆண்டுக்கான 'தாதா சாகேப் பால்கே' விருது பழம்பெரும் நடிகை வகிதா ரஹ்மானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகை வகிதா ரஹ்மான் பத்மஸ்ரீ, பத்மபூஷன் விருதுகளைப் பெற்றிருக்கிறார். விஸ்வரூபம் இரண்டாம் பாகத்தில் கமலின் தாயாக நடித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

1955ஆம் ஆண்டு 'ரோஜுலு மராயி' என்கிற தெலுங்கு படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை வஹீதா ரஹ்மான். அதன்பின், ஹிந்தியில் 'பைசா', 'கைடு', 'ககாஸ்ஹே போல்' உள்ளிட்ட பல படங்களில் நடித்து மிகச்சிறந்த கவனத்தைப் பெற்றார்.

குறிப்பாக, 1956இல் எம்.ஜி.ஆர். நடிப்பில் வெளியான 'அலிபாபாவும் 40 திருடர்களும்' திரைப்படத்திலும் நடித்திருந்தார்.

90இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்த வஹீதா, சிறந்த நடிகைக்கான தேசிய விருதை ஒருமுறையும் மேலும் பல விருதுகளையும் பெற்றுள்ளார். இவருக்கு மத்திய அரசு, 1972இல் பத்மஸ்ரீ விருதையும் 2011இல் பத்மபூஷண் விருதையும் வழங்கி கௌரவித்தது. இந்நிலையில், நேற்று இந்திய மத்திய அரசால் வாழ்நாள் சாதனையாளர்களுக்கான 'தாதா சாகேப் பால்கே' விருது வஹீதா ரஹ்மானுக்கு (வயது 85) அறிவிக்கப்பட்டுள்ளது.

### மணிப்பூரில் மீண்டும் பதற்றம்

## 3 மாதங்களுக்கு முன் காணாமல்போன 2 மாணவர்கள் சடலமாகக் கிடக்கும் புகைப்படம் வெளியானதால் பரபரப்பு

மணிப்பூரில் சுமார் 3 மாதங்களாக தேடப்பட்டுவந்த மெய்தீ சமூகத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள் சடலமாக கிடக்கும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூரில் பழங்குடியினர் அந்தஸ்து தொடர்பாக மெய்தீ, குக்கீ சமூகத்தினரிடையே கடந்த மே 3ஆம் திகதி வன்முறை வெடித்தது. 5 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் இந்த வன்முறையில் 180இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தும், இலட்சக்கணக்கானோர் சொந்த வீடுகளை விட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டும் உள்ளனர்.





பதற்றம் தணிந்த நகரங்களில் 2 நாட்களுக்கு முன்பு இணையசேவை முடக்கம் தளர்த்தப்பட்ட நிலையில், சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலான 2 மாணவர்களின் சடலங்களின் புகைப்படத்தால் மணிப்பூரில் மீண்டும் பதற்றம் உருவாகியுள்ளது. கடந்த ஜூலை மாதம் காணாமல்போன மெய்தீ சமூகத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள் சடலமாகக் கிடக்கும் புகைப்படமும், அதற்கு முன்பு பாதுகாப்பு முகாம் அருகே துப்பாக்கி ஏந்திய இருவர் பின்னணியில் உயிரோடு இருக்கும் புகைப்படமும் வெளியாகியுள்ளது.

ஆயுதம் ஏந்திய குழுக்கள் 2 மாணவர்களை கொன்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த மாணவர்கள் 17 வயதுடைய லிண்டோயின் காம்பி, 20 வயதான ஹெம்ஜித் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், கொடுங்குற்றத்தை செய்தவர்களுக்கு நிச்சயமாக கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் மணிப்பூர் முதலமைச்சர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது. மாணவர்கள் படுகொலையின் பின்னணியில் இருப்பவர்கள் யார்? சடலங்கள் எங்கு கிடக்கின்றன? என்பது குறித்து ஒன்றிய பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்து மணிப்பூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





**'அமெரிக்காவுக்குள் அனுமதிக்கப்படுவோம்' என்ற நம்பிக்கையில் ஆபத்தான பாதைகளைக் கடந்து அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் குவியும் அகதிகள்.....**

## மனிதனுக்கு பன்றியின் இதயத்தைப் பொருத்தி சாதனை!



இறக்கும் தறுவாயிலிருந்த ஒருவருக்கு அமெரிக்க மருத்துவர்கள் பன்றியின் இதயத்தைப் பொருத்தி சாதனை படைத்திருக்கின்றனர்.

உலகம் முழுவதும் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளால் உறுப்புகள் செயலிழப்பு என்பது அதிகரித்து வருகிறது. இதனால் விலங்குகளின் உறுப்புகளை குறிப்பாக, பன்றியின் உறுப்புகளை மனிதர்களுக்குப் பொருத்தும் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் அமெரிக்காவின் மேரிலாண்ட் பல்கலைக்கழக மருத்துவர்கள் இரண்டாவது முறையாகவும், பன்றியின் இதயத்தை மனிதனுக்குப் பொருத்தி வெற்றி கண்டுள்ளனர்.

58 வயதுள்ள கடற்படை முன்னாள் அதிகாரி லோரன்ஸ் பாசெட், இதய செயலிழப்பு காரணமாக இறக்கும் தறுவாயிலிருந்தார். பன்றியின் இதயத்தைப் பொருத்துவதற்கு அவர் சம்மதித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, மருத்துவர்கள் பன்றியின் இதயத்தை லோரன்ஸுக்குப் பொருத்தியுள்ளனர். தற்போது நாற்காலியில் எழுந்து உட்கார்ந்து மற்றவர்களுடன் சகஜமாகப் பேசும் அளவுக்கு லோரன்ஸின் உடல்நலம் முன்னேறியுள்ளது.

இதேபோன்று சமீபமாக அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக்கழக மருத்துவர்கள், மூளைச்சாவடைந்த ஒருவரின் உடலில் இரண்டு மாதங்கள் பன்றியின் சிறுநீரகத்தைப் பொருத்தி, அது இயல்பாகச் செயற்படுவதை வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்த்துள்ளனர்.

## விசா சேவையை இடைநிறுத்திய இந்தியா; கவலையில் கனடா

கனடா விசா சேவைகளை இந்தியா நிறுத்தி வைத்திருப்பதற்கு கனடா அரசு கவலை தெரிவித்துள்ளது.

காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கின் விசாரணையில் ஒத்துழைக்கும்படி இந்தியாவுக்கு மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பேசிய கனடா பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர், இந்தியாவின் ஒத்துழைப்பை நாடுவதாகத் தெரிவித்துள்ளார். இவ்வழக்கின் விசாரணை கனடாவுக்கும் அதன் கூட்டு நாடுகளுக்கும் மிகவும் முக்கியமானது என்று கூறிய பில் பிளேர், வழக்கின் விசாரணை முடுக்கி விடப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய 5 நாடுகளும் உளவுத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ள '5 ஐஸ்' (5 கண்கள்) என்ற பெயரில் கூட்டணியை கடந்த 1941இல் உருவாக்கின.



கனடாவில் காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் நிஜ்ஜார் கொலையில் இந்திய முகவர்களுக்கு (ஏஜென்ட்டுகள்) தொடர்பிருப்பதாக நம்பத் தகுந்த உளவுத் தகவல்கள் கிடைத்துள்ளன என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ் சாட்டினார். இதனால் இரு நாடுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கனடாவிலுள்ள அமெரிக்க தூதர் டேவிட் கோகன், வழங்கியுள்ள செவ்வியொன்றில்,

''5 ஐஸ்' அமைப்பின் உளவுத் தகவல் அடிப்படையில்தான், காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியா மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார்'' என தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில்,

''ஹர்தீப் சிங் கொலை செய்யப்பட்ட பின் கனடாவுக்கு உளவுத் தகவலை அளித்தது '5 ஐஸ்' கூட்டணியில் அங்கம் வகிக்கும் அமெரிக்காதான்'' என தெரிவித்துள்ளது.

இந்த '5 ஐஸ்' அமைப்பு சட்டம் மற்றும் மனித உரிமைகள் அடிப்படையில் செயற்படுவதாகவும், தங்கள் நாட்டின் நலன்கள் குறித்த தகவல்களை ஒருவொருக்கொருவர் பகிர்ந்துகொள்வதாகவும் கனடா அரசின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெர்னா அணை உடைப்பு: அதிகாரிகள் 8 பேர் கைது!



லிபியா தாக்கிய டேனியல் புயல் மற்றும் மழையால் டெர்னாவில் இரு அணைகள் உடைப்பெடுத்ததால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தமை தொடர்பில் 8 அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து அந்நாட்டு சட்டத் துறை உயரதிகாரி அல்-சித்திக் அல்-சூரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

புயல் காரணமாக டெர்னா நதியின் குறுக்கே கட்டடப்பட்டிருந்த இரு அணைகள் உடைந்தமை தொடர்பில் நீர்வளத் துறையைச் சேர்ந்த 8 அதிகாரிகளைக் கைதுசெய்து விசாரித்து வருகிறோம்.

அவர்களில் 7 பேர் முன்னாள் அதிகாரிகளாவர். ஒருவர் தற்போது பணியில் இணைந்திருப்பவர். தவறான மேலாண்மை, அலட்சியம், தவறான முடிவுகள் போன்றவற்றால் இந்தப் பேரிடருக்குக் காரணமாக இருந்ததாக அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது - என்றுள்ளது.

வடக்கு ஆபிரிக்க நாடான லிபியா, மத்தியதரைக்கடலையொட்டி அமைந்துள்ளது. அந்தக் கடலில் உருவான டேனியல் புயல் கடந்த 10 மற்றும் 11ஆம் திகதி கிழக்கு லிபியாவைக் கடந்தது.

அதன் விளைவாக தொடர் மழை பெய்ததன் காரணமாக அந்தப் பகுதியில் ஓடும் வாடி டெர்னா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக, அந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இரு அணைகள் உடைந்து வெள்ள நீர் அருகிலுள்ள டெர்னா நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் பாய்ந்தது.

வாடி டெர்னா உருவாகும் மலைப் பகுதிக்கும், அது மத்தியதரைக்கடலில் கலக்கும் முகத்துவாரத்துக்கும் இடையே டெர்னா நகரம் அமைந்துள்ளதால் அணை உடைந்து பாய்ந்து வந்த வெள்ள நீர் அந்த நகரிலிருந்த வீடுகள், வாகனங்கள் உள்ளிட்ட மக்களின் உடமைகளை அடித்துச்சென்று கடலுக்குள் தள்ளியது.

இந்தப் பேரழிவில் சிக்கி 11ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 10ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். தொடர்ந்தும் அங்கு மீட்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டுமா?

சுத்தமான காற்று, நல்ல குடிநீர், ஆரோக்கியமான உணவு மற்றும் வசிப்பதற்கு இருப்பிடம் ஆகியவைதான் மனிதனின் முதல் தேவைகள். வளங்களைக் குவித்து முன்னேற துடிப்பதால், பல்வேறு காரணங்களால் மனிதர்கள் இயற்கை வளங்களை அழித்து வருகின்றனர்.

இதனால் சுத்தமான காற்றை சுவாசிப்பது அரிதாகி வருகிறது. தூய்மையான காற்றுள்ள இடங்களைத் தேடி அலையும் மனிதர்களுக்கு உலகில் சில இடங்களே மிஞ்சியுள்ளன.

அந்தவகையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தீவு மாநிலம், டஸ்மேனியா. இம்மாநிலத்தின் வடமேற்கு முனையிலுள்ள தீபகற்ப பகுதி, கேப் க்ரிம். இது 'உலகின் முனை' (Edge of World) எனவும் அழைக்கப்படுகிறது.

அன்டார்டிகாவிலிருந்து எவ்விதத்திலும் அசுத்தமாகாத வேகமான காற்று, மணிக்கு 180 கிலோமீற்றர் வேகத்தில் இங்கு வந்து சேர்கிறது. உலகின் பிற பகுதிகளிலிருந்து தொலைதூரம் இருப்பதாலும், சுற்றுலாப் பயணிகள் அறவே செல்லாத இடமென்பதாலும், பனிமலைகள் நிறைந்த தெற்கு கடற்பகுதியின் மீது பயணித்துவரும் காற்று இங்கு வந்தடைவதாலும், இங்குள்ள காற்று உலகிலேயே தூய்மையானது என பொதுநலவாய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி விஞ்ஞானி டொக்டர். ஆன் ஸ்டேவர்ட் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று உலகெங்கிலும் உள்ள பிற சுத்தமான காற்றுள்ள இடங்கள், அமெரிக்காவின் மேற்கு பகுதியிலுள்ள தீவு மாநிலமான ஹவாயிலுள்ள மௌனா லோவா, பசுபிக் கடற்பகுதியின் தென்மேற்கு பகுதியிலுள்ள மக்குவாரி தீவு, அண்டார்டிகாவிலுள்ள கேசி நிலையம் மற்றும் நோர்வேயின் ஸ்வோல்பார்ட் பகுதியில் ஸ்பிட்ஸ்பர்கன் தீவில் உள்ள நை-அலெசுண்ட் ஆகியவையாகும்.

சுத்தமான காற்று உடல் ஆரோக்கியத்துக்கு அவசியமானது என்பதால் இத்தீவிலிருந்து கொள்முதல் செய்த காற்று என விளம்பரம் செய்து 'டஸ்மேனிய காற்று' என பெயரிட்டு போத்தல்களில் இக்காற்றை அடைத்து வியாபாரம் செய்ய தொடங்கியுள்ளனர்.

## தமிழகத்துக்கு காவிரி நீர் திறக்க எதிர்ப்பு: பெங்களூரில் முழு அடைப்புப் போராட்டம்!

தமிழகத்திற்கு காவிரி நீர் திறக்க எதிர்ப்புத் தெரிவித்து கர்நாடகா தலைநகர் பெங்களூரில் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

கன்னட சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்படும் போராட்டத்துக்கு 100இற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

முழு அடைப்பைத் தொடர்ந்து பெங்களூர் முழுவதும் 144 தடையுத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7